கனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

RECEIVED
4 DEC 1971
TANJORE

உயர்வடைதல் என்றோ?

எதையெதையோ பேசுகின்றார்; செய்கின்றார்! நாட்டின்
இருண்டநிலை மறையவில்லை; தாழ்வகல வில்லை!
புதைகுழிகள்; ஏமாற்றுப் புனைவுகள்;பூ சல்கள்!
பூத்துவரும் முன்னேற்றம் தின்கின்ற நாய்கள்!
கதையெழுதி இழிவெழுதிக் கயமைவிளைக் கின்ற
கழிசடைகள்! மலக்குழிகள்! பணந்தின்னும் பேய்கள்!
-பதைபதைக்கும் நெஞ்சோடு நாட்டைநினைக் கின்றேன்.
பைந்தமிழர் வாழ்வுநிலை உயர்வடைதல் என்றோ?

நாகரிகம் எனும்பெயரால் நசித்துவரும் உள்ளம்!
நரிக்கூட்டம் ஆடுகின்ற அரசியல்கூத் தாட்டம்!
வேகின்ற வறுமையிலே சாகின்ற உயிர்கள்!
வெறித்தனங்கள்! அதிகாரம், பதவிக்கொண் டாட்டம்!
வாதுபோ கற்றநிலை! வழவழப்புப் பேச்சு!
வழிவழியாய் அரித்துவரும் குலசமயக் கூச்சல்!
—நோகின்ற நெஞ்சோடு நாட்டைநினைக் கின்றேன்.
நொந்துவரும் எந்தமிழர் உயர்வடைதல் என்றோ ?

சுவடி: 9. ஓலை: 6-7. விலை: 75 காசு.

-நமக்கு வந்த மடல்கள்-

[என்மேல் உள்ள அன்பால் என்னை அளவிறந்து பாராட்டியும், நான் வெட்கப்படும்படி புகழ்ந்தும் கட்டுரைகளும் பாடல்களும் அன்பர்களிடமிருந்து ஏராளமாக வந்து கொண்டிருக்கின்றன. ஒருவேளை அவ்வாறு எழுதினால் தான் அவை இப்பகுதியில் வெளியிடப்படும் என்னும் தவறான நம்பிக்கையினாலோ. என் மேல் கொண்டஆழ்ந்த பற்றினாலோ அன்பர்கள் அவ்வாறு எழுதலாம் என்று நினைக்கின்றேன். அஃது எப்படியானாலும் அப் புகழுரைகளை நான் படிக்கையில், என் நாடி நரம்புகளெல்லாம் கூசிக் குனுகிப் போகின்றன. என்அறிவு நடுங்குகின்றது; என் மனம் கள்ளுண்ட வெறியனைப் போல் நிலை தடுமாறுகின்றது. இத்தகைய நிலைகளால் நான் எங்கு ஒருவேளை குருதியழுத்தத்தால் உறைந்து போய் விடுவேனோ என்று கூட அஞ்சுகின்றேன். எனவே அன்பர்களிடம் நான் கைகூப்பிப் பணிவாக வேண்டிக்கொள்வது இது: என் மேல் பற்று வைக்க வேண்டா. அப்பற்றினால் எவருக்கும் ஓர்எள்ளின் மூக்கத்துணையும் பயன் விளைந்து விடப் போவதில்லை. உங்கள் புகழ்ச்சியினாலோ இகழ்ச்சியினாலோ என் உள்ளம் மகிழ்வடைவதோ சோர்வடைவதோ எப்பொழுதும் நடைபெறப் போவதில்லை. எனவே அவற்றில் உங்கள் அரிய எண்ணங்களையும் கிடைத்தற்கரிய நேரங்களையும் வீணடிக்க வேண்டா. அந்த நேரத்தில் என் கருத்துரைகளை எவருக்காவது படித்துக் காட்டுங்கள்; அவற்றைப் பற்றி எவருடனாகிலும் உரையாடிப் பாருங்கள்; என் பாடல்களில் உங்களுக்குப் பிடித்த ஒரு வரியையாகிலும் நினைவிலிறுத்திக் கொள்ள முயன்று பாருங்கள்; தலைமுறை தலைமுறையாக அடிமையுற்றுக்கிடக்கும் இத் தமிழரைத் தூக்கி நிறுத்தும் பணியில் நான் போகின்ற வழி சரி தானா என்று ஆய்ந்து பார்த்து, அதிலுள்ள குற்றங்குறைகளை எனக்கு விரிவாக எடுத்துக் கூறுங்கள்; நேரில் வர வாய்ப்பிருந்தால் என்பால் வந்து அவைபற்றி உரையாடி எனக்கு அறிவுறுத்துங்கள். இல்லெனில் என் வழியில் ஏதேனும் ஒரு வகையில் நீங்கள் எனக்குத் துணையாக வர இயலுமானால் அவ்வகையில் முயற்சி செய்து பாருங்கள். நான் ஒரு துகள்; அழிந்து போகும் ஓர் உருவம்! என்னிலிருந்து கிளம்பும் கருத்துகளுக்குச் சொந்தமானவன் நான் அல்லன். என் அறிவுக்கு, உள்ளத்திற்கு, இயக்கத்திற்குக் கரணியமாவது எதுவோ, அதற்கே அவை சொந்தம். எனவே, என்னைப் பாராட்டுவதோ புகழ்வதோ என் உயிரையும் உடலையும் விரைவாகப் பிரிந்து போகும்படி செய்யும் செயலே யாகும் என்று எண்ணிக் கொள்ளும்படி கூறி எச்சரிக்க விரும்புகின்றேன். —பெருஞ்சித்திரன்]

0: 276: "தென்மொழி" யைத் 'தேன்மொழி'யாக்கித் தித்திக்கத் தித்திக்கத் திங்கள்தொறும் தனித்தமிழார்வலர்க்கு மேன்மேலும் தன்மானம் திருத்தமுறப் படைத்து, எழுச்சி ஊக்கும் தனித்தமிழ்ப் பெரும் பேறே! சான்றோரே!! எங்கள் தன்னேரிலாத தனித்தமிழ்ப் படையின் தலைமை ஏறே! தன்மானமிலிகள்!, உமை மறிக்க நேர்ந்தால் ஒன்பது கோடித் தனித்தமிழ்க் கைகளும் ஓய்ந்திருந்திடப் போவதிலை; இது மெய்யே! —தமிழ் ஒளியான், கரூர்

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம்)

தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 9: ஓலை: 6-7.

[நிறுவனம் தி. பி: 1990 (1959)]
கன்னி-துலை. தி. பி. ௨00௨ - (அக்-நவ. - 1971.)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

நமக்குள் நாம்...!

உலகின் மிகப் பழைய இனமக்களுள் மிகப் பழையவர்கள் நாம். இதற்கு வரலாறு உண்டு; சான்றுகள் உண்டு; எண்ணித் தொலையாத இலக்கண இலக்கியங்களும் உண்டு. பிறர்க்கெல்லாம் மொழி என்று ஒன்று தோன்று முன்பே, இயற்கையாக மொழி தோன்றி, எழுத்துகள் தோன்றி, இலக்கியங்கள் தோன்றி, அவற்றுக்கான இலக்கணங்கள் தோன்றியிருந்த மொழி நம் மொழி. இனி, பிற மொழிகளிலெல்லாம் உள்ள இலக்கியங்கள் மாந்த நடைமுறைக் கொவ்வாத கற்பனைகள் மிடைந்த கதைகள் நிரம்பிய வெற்று இலக்கியங்களாகவும், இலக்கணங்கள் எழுத்துக்கும் உரைநடைக்குமான வெற்று இலக்கணங்களாகவுமே இருப்ப, நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே நமக்கிருந்த மொழி இலக்கியங்கள் மக்களுக்கான வாழ்வு இலக்கணங்களாகவும், அன்றிருந்த மொழி இலக்கணங்கள் அவர்களுக்கான வாழ்வு இலக்

கியங்களாகவுமே இருந்தன; இன்றும் இருக்கின்றன. அன்றிருந்த தொல்காப்பியம் ஓர் இலக்கண இலக்கியமாகவும், அக்கால் தோன்றிய திருக்குறள் ஓர் இலக்கிய இலக்கணமாகவும், இன்றும் விளங்குவதே நம் கூற்றினை மெய்ப்பிக்கப் போதுமான சான்றாகும்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பும், மொழிச் சிறப்பும், வாழ்க்கைச் சிறப்பும் பெற்று விளங்கிய நாம், இன்று, உலகில் உள்ள எல்லா இன மக்கட்கும் கடைப்பட்டவராக, அடிமைப்பட்டவராக நடோடிகளாக இருப்பதுமன்றி, நமக்குள் நாமே பகைவர்களாகவும் ஒருவரை ஒருவர் கீழ்மைப்படுத்தும் விரகாண்மை மிக்கவர்களாகவும், நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளும் தன்னலம் மிகுந்தவர்களாகவும், அண்டை அயலாரை வீழ்த்தும் கரவு நிறைந்தவர்களாகவும், ஒன்றும் அறியாத நம் மக்களின் சிறிய ஈட்டத்தையும் ஏமாற்றிப் பறிக்கும் கல்நெஞ்சக்காரர்களாகவும், நம் தனி ஒருவர்க்காக நம் இனத்தையே காட்டிக்கொடுக்கும் கயவர்களாகவும், நமக்குள் நாமே அடித்துக் கொள்ளும் காட்டு விலங்காண்டிகளாகவும் இருக்கின்றோமே என்பதை நினைத்தால், நமக்குள் நாமே சிரித்துக்கொள்வதா, அழுது புலம்புவதா அல்லது நாணி நான்று கொண்டு உயிரை விடுவதா என்று நினைக்கத் தோன்றுகின்றது.

மானம் மிகுந்த நம் இனந்தான் இன்று மானமிழிந்து மதிகெட்டு ஒரு வேளைச் சோற்றுக்காக மாற்றான் வீட்டு வாயிலில் மண்டியிட்டுக் கிடக்கின்றது. வீரத்தைப் பெரிதாகப் போற்றிய நம் இனந்தான் இன்று வீரமிழந்து நரம்பு துவண்டு, வீசியெறியப்படும் வெள்ளெலும்புத்துண்டிற்குப் பிற இனத்தவனின் வெளிப்புற வாயிலில் காத்துக்கிடக்கின்றது. ஒழுக்கத்தை உயிரெனப் பேணிய நம் இனந்தான், இன்று ஒழுக்கத்தை உதறி விட்டு, நாடி நரம்புகளில் நடுக்கமின்றிச் சொல்லில் நாணமின்றி, எத்துறையும் புகுந்து, கிடைக்கின்ற எச்சில் சோற்றுக்கு எச்செயலையும் செய்வதற்கு எப்பொழுது எப்பொழுதெனக் காலம் பார்த்துக் கிடக்கின்றது. மொத்தத்தில் நாம் நாயினும் இழிந்தவர்களாக, பேயினும் கொடுமை மிகுந்தவர்களாக மாறிவிட்டோம். நம் பெருமை, நமக்குற்ற வாழ்க்கைச் சிறப்பியல்கள் அனைத்தும் காய்ந்த கனவுகளாக, உதிர்ந்த வெற்றுச் சருகுகளாகப் போய்விட்டன. கற்சிலைகளாக இருந்த நாம் இன்று சிதறிச் சிதைந்துபோகும் கற்சில்லுகளாக வீழ்ந்துகிடக்கின்றோம். நம் பெருமை இன்று சிலப்பதிகார,மணிமேகலை யாக வடிவமைத்துக்கூறப் பெறுகின்றது; திருக்குறள் பரிமேலழகர் உரையாக எழுதிக் காட்டப் படுகின்றது; சேரன் செங்குட்டுவனாக நடித்துக்காட்டப் பெறுகின்றது.

ஒரு கண்ணகியை வைத்துக்கொண்டே இங்கு உள்ளஅனைத்துப் பெண்களையும் கற்பின் கொழுந்துகளாக, பொற்பின் செல்விகளாகப் பிறர்நம்பும்படி நாம் கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றோம். ஓர் ஆரியப் படைகடந்த பாண்டியனை நினைவூட்டிக்கொண்டே இங்குள்ள அனைத்துக் கோழையரையும் நெடுஞ்செழியர்களாக விலைபோக்கிக் கொண்டிருக் கிறோம். ஒரு திருக்குறளை வைத்துக்கொண்டே இவ்வுலக முழுவ தையும் விலைபேசி வாங்கிவிட முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். இங்கு நமக்குத் தலைவர்களாக வந்து வாய்த்தவர்களும் நம் அனைத் துப் பேராசைகளுக்கும் ஏற்ற பூசாரிகளாக நின்று, நம்மையே ஆட்டிப் படைத்துக் கொண்டு, நம்மை நாளுக்கு நாள், மேலுக்குமேல் ஏமாற்றிக் கொண்டே இருக்க விரும்புவதுடன், இவர்களின் கரவான ஆனால் கவர்ச்சியான எண்ணங்களுக்குத் தக்கபடி என்றென்றும் நாம் ஏழைகளாகவும் கோழைகளாகவுமே இருக்க வேண்டுமென் றும் எதிர்பார்த்துக் கிடக்கின்றனர். அவர்கள் நம்மை இணைத்து அணைத்துப் பேசுகின்ற வெறும் பேச்சில் நாம் மயங்கி, சொக்கிக் கிடக்கும் வண்டுகளாகச் சேர்ந்திருப்பதைப் பயன்படுத்தி,அவர்களின் தந்நலச் செயல்களுக்கு உரமேற்றிக் கொள்கின்ற தன்மையை, இனவுணர்வும் பொதுநலமும் அற்ற நம் போல் உள்ளவர்களால் உணர்ந்து கொள்ள முடியாது.

நம்மோடு நாமாகக் கிடக்கும் நம்மில் ஒருவன் காலவுணர்ச்சி யால் கீண்டப் பெற்று, இனவுணர்வு உள்ளூரப் பெற்று, அறிவூட்ட மும் வினைத்திட்பமும் செறியப்பெற்று, எழுந்து நின்று, வெண்மை உள்ளமும் உண்மை உரைகளும் திண்மை வினைகளும் கொண்டு, நம்மை நோக்கி, இவ்வுலகத்தைக் காட்டித் தன்னோடு நடந்து வரக் கூவுவானானால், நாம் அனைவரும் அவன் மேலாக்கத்தைப் பார்த்து ஐயுற்று, அவன்மேல் விழுந்து பிடுங்குவது போல், அவன் கொண்ட நெஞ்சின் அகலம் என்ன, அதனுள் புதைந்து கிடக்கும் அன்பின் ஆழம் எவ்வளவு,அவன் தன்னொடு நடையிடக்கூறுகின்ற சொற்களில் எத்தனைச் சொற்கள் அவன் உள்ளத்திலிருந்து வெளிவந்தன, எத்தனைச் சொற்கள் அவன் உதட்டிலிருந்து குதித்தன, அவற்றின் நீள அகலம் எவ்வளவு, அச் சொற்களில் உள்ள அறிவுச் சூட்டின் வெப்பத்திறம் எவ்வளவு, அச்சூடு எந்தக்காலம் வரை ஆறாமல் இருக் கும், அவன் மண்டைக்குள் கிடக்கும் மூளைத் திரட்சிக்கு எப்படி இத் தகைய கொழுமை பிறந்தது, அக்கொழுமை நமக்கிருக்கும் மூளைக் கொழுமையை விட எப்படி உயர்ந்ததாகிவிடும் — என்றெல்லாம் அஃவனைப்பற்றிய அகப்புற ஆராய்ச்சியில் ஈடுபட்டு, உரைப் பிளிறும்

அவனை ஊமைப்படுத்தியும், நடை பயிற்றும் அவன் கால்களை முடப்படுத்தியும், நெறிப்படுத்தும் அவன் அன்புக் கைகளை முறித் தெறிந்தும் விடுவதுடன், அவன் முண்டி முன்செல்லும் பாதைகளி லெல்லாம் இடையூடாய்ப் போய்ச் சொற்புதர்களைப் பரப்பியும் பூசற்புரைகளை உண்டாக்கியும், பழிக்குழிகளையும், இழிவுப்பள்ளங் களையும் வெட்டி வீழவைத்தும், என்றென்றும் நம்மை இருந்த இடத்தி லேயே இறுத்தி வைத்துக்கொண்டிருக்கும் நம் அறியாமையை என்னென்பது?

'செடி சாய்ந்தால் நடலாம்; மரஞ் சாய்ந்தால் நட முடியாது" என்னும் பழமொழிக்கோர் எடுத்துக்காட்டாய் இருக்கும் நம் இனத் தின் உட்புற அரிப்புகளையும் வெளிப்புற வெடிப்புகளையும் எண்ணி மாளாது. எத்தனை எத்தனைக் குலங்களாக, கொடிகளாக நாம் பிரிந்து வேரோடிக் கிடக்கின்றோம் என்று எண்ணி நம்முள் நடுங்கு பவர்கள் எத்தனைப் பேர் இருப்பர்? அவருள் எத்தனைப் பேர் அக் குலச் சகதியினின்றும் கொடிச் சிக்கலினின்றும் விடுபட்டும் அறுபட்டும் வெளியே வந்திருப்பர்? அத்துறையில் நமக்கு வழிகாட்டிச் செல்லும் தலைவர்களில் தம் சொல்லுக்குத் தாமே நடந்து காட்டிய மெய்ம்மை—யாளர் எத்தனைப் பேர் இருப்பர்? அவ்வாறு இல்லாதவர்களை நாம் இன்னும் நம்பிக் கொண்டு கிடப்பதில் நமக்கு ஏன் இவ்வளவு பேராசை? அதில் ஒளிந்திருக்கும் நம் தந்நலப் பற்றுக்கு நாம் இட் டிருக்கும் பொதுநலத் திரை எவ்வளவு மொத்தமானது! வலியது! இத்தனையும் சேர்ந்து நம்மை இன்னும் எத்தனை நூற்றாண்டுக்குத்தான் இப்படியே வைத்திருக்கப் போகின்றனவோ? உண்மையாக, அத்தனை நூற்றாண்டிற்குப் பின்னும் நாம் அப்படியே இருக்கமாட்டோம் என்ப தற்கு நம்மிடம் இருக்கும் உறுதி தான் என்ன?

கட்சியென்றும் தலைமையென்றும் நாம் நம்மை எவ்வளவு கட்டுப்படுத்திக் கொண்டு கிடக்கின்றோம்! அவ்வாறு கட்டுப் பட்டுக் கிடப்பதைவேறு கடமையென்று கூறி நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு வருகின்றோம். நமக்குள் நாம் கீழாக நடந்து கொள்வ தையும் நமக்குள் நாமே ஏமாற்றிக் கொள்வதையும் கொள்ளையடிப்பதையும் பிறர் அறியக் கூடாதென்பதற்காக ஒரு பெரிய கருந்திரையிட்டு மூடி விட விரும்புகின்றோம். அத்திரைக் குக் கண்ணியம் என்று பெயரிட்டுக் கொண்டோம். நமக்குள் நாம் உண்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் ஒருவரையொருவர் மடியவிழ்த்துக் கொள்ளக் கூடாதென்றும்—தேவையான பொழுது கூட நம்மில் ஒருவனை நாம் எச்சரிக்கத் தவறி விடுகின்றோம். நம்மி டம் ஒழுக்கம் என்னும் பெயரில் ஒழுங்கின்மை வளர்ந்து வருகின்றது.

கடமை என்னும் பெயரில் கயமை மிகுந்து வருகின்றது. கண்ணியம் என்னும் பெயரில் கோழைத்தனம் ஊடுருவப் பார்க்கின்றது. நமக்குள் அரித்தெடுக்கும் பொய்மைப் புழுக்களை வைத்துக் கொண்டும், போலி ஆகுலங்களை வைத்துக் கொண்டும், நாம் எப்படியும் பிறரை வென்று விட முடியாது. நம்மிடம் உள்ள கத்திகளைத் துருப் பிடிக்க விட்டுவிட்டு, அதன் மேலுள்ள உறைகளை பளபளப்பாக்கி வைத்துக் கொண்டு, நாம் எந்தப் போரிலும் குதித்து விட முடியாது. அத்தகைய நிலை நமக்கு மேலும் மேலும் தோல்விகளையே உண்டாக்கிக் கொடுத்து, நம்மை மீண்டும் மீண்டும் இருந்த இடத்திற்கே சறுக்கிக்கொண்டுபோய் நிறுத்தும். உலகவரலாறு இப்படித்தான்கூறுகின்றது. சூழ்ச்சிகளையும் பொய்பூசல்களையும் வேரறுக்க அச்சூழ்ச்சிகளையும் பொய்பூசல்களையுமே கடைப்பிடிக்கவேண்டும் என்பது, அவர்களின் வேத, புராணங்களைப் போலவே பழைய நெறிமுறையாகும். ‘வயிரத்தை வயிரத்தால்தான் அறுக்க வேண்டும்’ என்னும் பழமொழி இதற்கு முழுமையாகவே பொருந்தாது. சூழ்ச்சியும்,பொய்யும் வயிரம் போலும் அத்துணை வலிந்ததன்று. சூழ்ச்சியையும் பொய்யையும் வயிரத்திற்கு ஒப்பிட்டால் அறிவையும், உண்மையையும் எதற்கு ஒப்பிடுவது? இப்படிப்பட்ட பொய்மை நிரம்பிய — வெறி நிறைந்த சூழ்ச்சிகள்—என்றைக்கும் ஒன்றையொன்று வெற்றி கொண்டதில்லை. எனவேதான் நம் பகைவனும் நம்மை முற்றிலும் ஒழிக்க முடியாமல் நாமும் நம் பகைவனை முற்றிலும் ஒழிக்க முடியாமல் கடந்த மூவாயிரமாண்டுகளாக நாம் போராடிக் கொண்டு கிடக்கின்றோம். நம் கடந்த கால வரலாற்றில் நாம் வெற்றி கொண்ட எழுச்சி நிலைகளும், தோல்வியுற்ற வீழ்ச்சி நிலைகளும் மாறிமாறி வந்து கொண்டிருப்பதை எண்ணிப்பார்க்கையில், நம் முனைப்புநிலையில் எங்கோ ஒருகுறைபாடு உள்ளதென்றே முடிவுகட்டத் தோன்றுகின்றது. நம் ஒட்டு மொத்தப் போக்கில் கட்டாயம் சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டே ஆக வேண்டும் என்று உறுதி கொள்கின்றது நெஞ்சம்.

நமக்குள் இனி மேல் ஒரு பழக்கத்தை உண்டாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இது வரை நம்முள் ஒளிந்து கிடக்கும் பொய்பூசல்களும் போலிப் பெருமைகளும் அவ்வப்பொழுது எழுந்து நம்மையும் நம்மைச் சுற்றி இருப்பவர்களையும் அலைக்கழிக்கின்றதை நமக்குள் நாமே மூடிப்பழக்கப்பட்டு விட்டோம். நம்முள் ஒருவன் செய்கின்ற சில தீமைகளை—சில புரைகளைப் பிறரறியாமல் நாமே மென்று விழுங்கிப் பழக்கப் படுத்திக் கொண்டோம். அவன் செய்கின்ற சில நல்ல செயல்களுக்காக, அவனால் வருகின்ற சில நன்மைகளுக்காக அவன் எழுப்பு

கின்ற பொய்மைத் தீ நாற்றத்தையும் போலி யாரவாரங்களையும் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று நமக்குள் நாமே கமுக்கமாகப் பேசிக் கொள்கிறோம்; இல்லையா? இவ்வாறு பொய்மையின் குளிரைத் தாங்கிக் கொள்ள முனையும் நாம், உண்மையின் சூட்டைத் தாங்கிக் கொண்டால் என்ன? உண்மையின் சூடு அவ்வளவுகொடுமையானதும் அன்று. பொய்மைக் குளிரிலேயே நம்மை முழுதும் மூடிப் போர்த்துக் கொண்டாகிலும் கிடந்து பழக்கப்பட்டு விட்டதால், உண்மையின் சிறிதளவான சூட்டிற்குக் கூட நாம் துடிதுடித்துக் கண்ணீர் விட்டுக் கதறியழத் தொடங்கி விடுகின்றோம். ஆனால் அவ்வுண்மையின் சூடுதானே பொய்மையின் குளிரை மெய்யாக ஓட்டவல்லது என்று நாம் உணர்ந்து கொண்டு அதைப் பொறுத்துக் கொண்டால் என்ன?

நான் வெளிப்படையாகச் சொல்ல விரும்புவது இது: நம் குறைபாடுகளை நாம் முகத்துக்கு முகம், வாய்க்கு வாய், கண்ணுக்குக் கண் நின்று பேசிப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். ஒருவனைப் பற்றி அவன் முதுகுப் புறத்திலும் அவன் தூங்குகின்ற பொழுதுமே பேசிப் பேசி நமக்குப் பழக்கப்பட்டு விட்டது. அவன் முன்னுக்குமுன் வந்து நின்று பேச அஞ்சுகின்றோம். அதிகாரத்திலோ, பதவியிலோ, அல்லது நமக்குத் தலைமையாகவோ இருக்கும் அவன், நம்மை நாம் நின்ற இடத்திலிருந்து விரட்டி விட்டால் என்ன செய்வது, எங்கே போவது என்றெல்லாம் எண்ணிப் பார்த்து அப்படிப் பேசத் தயங்குகின்றோம். உள்ளத்தில் அவனைப் பற்றிய வேற்றுமைகளைச் சுமந்து கொண்டு பொய்யாக அவன் முன் நின்று பேசிக்கொண்டிருக்கின்றோமே என்று நாம் வெட்கப்பட்டுக் கொள்வதில்லை. அதனால் உண்மையைப் பேச அஞ்சவேண்டியிருக்கின்றது. நாம் நமக்காக மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற சிறுமையான எண்ணத்திலிருந்து விடுபட்டால் தான், நாம் எல்லாரையும் நேருக்கு நேராக நின்று கேள்வி கேட்கத் தோன்றும்; நேருக்கு நேராக நின்று கண்டிக்க—தேவையானால் அவர் வருந்தும்படி இடித்துக் கூற நம் நாத் துடிதுடிக்கும்.

நேருக்கு நேராக நின்று இடித்துக் கூறுகின்ற வரையில் நாம் சரியான ஒரு தலைமையைப் பெற முடியாது. குற்றங்களை நம் தனிப்பட்ட ஒருவர்க்காகக் கூட நாம் மூடி மறைத்துவிடக் கூடாது. 'நம்மவர் தானே' என்பதற்காக நாம் நம்மவரைக் கேட்கத் தவறி விட்டால் நம் பகைமையைவிட இன்னும் கேடான பகைவனுக்குப் பின்னே நாம் நடந்து கொண்டிருக்கிறோம் என்று எண்ணிக் கொள்ள வேண்டியது —தான். 'நம் குற்றங் குறைகளை மூடி மறைக்கப் பழக்கப்படுத்திக்

கொள்ளுங்கள்' என்று தன்னைப் பின்பற்றுகின்றவர்களைப் பார்த்து எந்தத் தலைவன் சொன்னாலும் அவனை நாம் நம்பக் கூடாது. அவன் நமக்குத் தெரியாமல் எத்தனையோ குற்றங்களை, கொடுமைகளை மறைவாகச் செய்து கொண்டிருக்கின்றான் என்பது பொருள். அத் தகையவன் வேண்டுமானால் நாட்டைப் பிடிக்கலாம்; ஆட்சியைப் பிடிக்கலாம்; ஆனால் நம் பகைவனைப் பிடித்து விட முடியாது. இவ் வரிகள் வெறும் எழுத்துகளல்ல. என்றுமே பொய் போகாத மெய் யுணர்வின் ஓலங்கள்.

தமிழர்களாகிய நமக்கு வந்து வாய்த்த பகை புறத்தே இருந்து வந்த பகைதான் என்பதை நமக்குக் கிடைத்த பழம் பெரும் நூற்கள் ஓயாது பறை சாற்றி நிற்கின்றன. ஆனால் காலத்தால் அப் புறப் பகை நம் அகப்பகையாக உருக்கரந்து ஊடுருவி நிற்கின்றது. இவ் வகையில் நாம் நல்லன என்று கைப்பற்றிய தீமைகளும் உண்டு; தீமைகள் என்று கைநெகிழ்த்த நன்மைகளும் உண்டு. இவற்றைத் தனித்தனியே இனங்கண்டு கொள்ளாதவரையில் நாம் மேற்கொள்ள விருக்கும் போராட்டம் எவருடன் என்பதும், நாம் முன்னேறிச் செல்ல வேண்டிய திசை எது வென்பதும் நமக்கு விளங்காமல் போய் விடும், இவற்றை ஒருவாறு விளங்கிக் கொண்ட பின், சில வற்றுக்காக நம்மோடு நாமே போராடிக் கொள்ள வேண்டியிருக்கும்; சிலவற்றுக்காக நம் பகைவருடன் நாம் கைகோத்துக் கொள்ள வேண்டியிருக்கும்; நாம் விரும்பிப் பேராசையுடன் போற்றி வந்த சில பழக்கவழக்கங்களுக்கு நம் கைகளாலேயே தீயிட்டுப்பொசுக்க வேண் டியிருக்கும். நாம் இடையில் ஆகாதவை என்று தூக்கி வீசி விட்டு வந்த சிலவற்றை நாம்மீண்டும் தேடிக் கண்டுபிடிக்கவேண்டியிருக்கும். இம் முடிவுகள் தெரியும் வரை நம் வெற்றி முகட்டைத் தொட்டு விட் டோம் என்று பீற்றிக்கொள்ள முடியாது. அவ்வாறு பீற்றிக் கொள்வ திலும் பெருமையில்லை.

நாம் வெற்றி கொள்ள விருக்கும் பகைப்புலன்களின் அடிச்சுவட் டையும் இது வரை நாம் கண்டு கொண்டதாகச் சொல்லிக் கொள்ள முடியாது. **உண்மை** என்ற வாளைக் கைப்பற்ற நாம் பழகிக்கொள்ளவே இன்னும் ஒரு நூற்றாண்டானாலும் ஆகும்! ஓராயிரமாண்டானாலும் ஆகும். அதன்மேல் '**அறிவு**' என்ற கேடயத்தை வேறு ஏந்திப் பழகுதல் வேண்டும். அதன்பின் '**ஒழுக்க**'க் கவசத்தை நம் உடல் முழுதும் அணிந்து கொள்ளுதல் வேண்டும். அதற்குப் பின்தான் நம் உடல் தசைக்குள், அதன் நாடி நரம்புகளுக்குள் ஒளிந்து கொண்டிருக்கின்ற '**வீர**' உணர்வு முகிழ்த்து, நம் தசைக் கண்ணறைகள் யாவிலும்

பொங்கி வழியும். இவையெல்லாவற்றிற்கும் பின்னர் நடப்பது தான் வியப்பிலும் வியப்பை நமக்குத்தரும்! உண்மையும், அறிவும்,ஒழுக்க மும் வீரமும் நம்மை ஆட்கொள்ளும் அந்நேரத்தில், பகை நம்மை முந்திக்கொண்டுவிடுமோ என்று நினைத்துவிட வேண்டா. அந்தப்பகை தானகவே நம்முன் தன்னை அழித்துக் கொண்டு நெடுங்கிடையாக வீழ்ந்து இறந்து படும். நம்மை இத்தனை யாண்டுக் காலமாகக் கட்டழித்துக்கொண்டு வந்த துயரங்கள் அக்கால் நமக்குப் போற்றித் திரு அகவலாக மாற்றப் பெறும். நம்மைத் தாழ்த்தி எழுதி வைக்கப் பெற்ற புராண இதிகாசப் புளுகுகள் யாவும் புழுப்பூச்சிகளுக்கு இரை யாக்கப் பெறும். குலவிழிவுகளும், இனக்கட்டுகளும் அறவே அகற்றப்பட்டு மீமிசை மாந்தத் தமிழ்க் குமுகாயம் ஒருங்கே மலரும். அதில் நம்மின் புதிய வரலாறும் பழைய வரலாறும் பொன்னும் மணியும் போல் பொதிந்து போற்றப்பெறும். அந் நற்காலத்தை நோக்கிப் போகவிரும்பும் நாம் ஒவ்வொருவரும் நம் உடலில் ஓடுவது தமிழ்அரத்தந் தானு-தமிழனின் உருவத்தினின்று இன்னும் நாம் மாருமல்தானே இருக்கின்றேம்-நம்மிடத்தில் பொதுநலவுணர்வு ஓர் எள்ளின் மூக்கத் துணையேனும் உளதா-என்றெல்லாம் நம்மை நாமே எடையிட்டு நிறுத்துப் பார்த்துக்கொண்டு நடையிட்டுச் செல்லுதல் வேண்டும்.] 0



தமிழறிஞர் சோமசுந்தரனர் மறைவு.

நெய்வேலி, மேலக்கினை உ. த. க. அன்பர் திரு. அப்பூதி அவர்களின் தந்தையாரும், சிறந்த பகுத்தறிவாளரும், தமிழறிஞரும் 'TIRUVALLUVAR AND BRAHMANISM' The Dravidian Culture and the Aryan Culture' திருக்குறள் ஆராய்ச்சி, மேல் நாட்டுப்பொன்மொழிகள், போன்ற நூல்களின் ஆசிரியரும், மதுரையில் நடைபெற்ற உ. த. க. மகாநாட்டில் மொழிஞாயிறு ஞா. தேவநேயப்பாவாணரால் பொன்னுடை போர்த்துச் சிறப்பிக்கப்பெற்றவருமான தமிழ்த்திரு. மதியழகனர் (சோமசுந்தரனர்) க. இ; ப. ஆ. அவர்கள், கடந்த சூலைத் திங்கள் 18-ஆம் பக்கல் (4-11-1971) அன்று இரவு, 11மணியளவில் தம் பொன்னுடலை நீத்துப் புகழுடம்பு எய்தினர் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றேம். அவ்வறிஞரைப் பிரிந்து துயருறும் அவர்தம் குடும்பத்தினர்க்கும் தமிழன்பர் பிறர்க்கும் தென்மொழி தன் ஆற்றுமையைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர் தம் நூல்களைக் கற்றுப் பயனடையுமாறு தமிழன்பர்களைத் தென்மொழி வேண்டிக் கொள்கிறது. –பெருஞ்சித்திரன்

நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

(துரை-மாணிக்கம்)

பாட்டு ௩௧

எவன்கொல் அறிகும் இறையவன் கிடக்கை!
கவண்முகத் துருவிய சிறுகல் போல
விசைப்பே அளவிடைப் பொழுதே! வினையே
நசையுள வயினே; நலிதலும் மெலிதலும்
அதனுட் பட்ட; அவைபொறி வழிய!
செவ்விதி னமையா ஐம்பொறி முனைப்பும்
எல்லையுள் வாங்கும் அறிவி னுன!
இவைகொடு தெளிவே இறையவன் உண்மை!
அவன்றிறல் மேற்றே அண்டம்;
அவிழ்தலுங் குவிதலும் அரிதுமற் றறிவே!

பொழிப்பு: இறைவனின் இருக்கையை எவரே அறிகுவர்? கல்லெறி கருவியின் முனையினின்று உருவிப்போகும் சிறுகல்லைப் போலும் வாழ்க்கையின் விசைப்பு ஓர் அளவுபட்ட சிறுபொழுதே. அவ்விடைப் பொழுதில் செய்யப் பெறும் வினையோ, உள்ளத் தெழுந்த விருப்பத்தைப் பொறுத்தது. உடல், உள்ள நலிவுகளும் மெலிவுகளும் அவ் விருப்பத்தின் உள்ளடங்குவன. அந்நலிவும் மெலிவும் உள்ளடங்கிய விருப்பமும் வினையும் உடலின் ஐம்பொறி களை வாயாகக் கொண்டன. ஒன்றுக்கொன்று மேலவும் தாழவு மாகச் செப்பமுற அமையாத அவ் வைம்பொறிகளும் தம்முள் முனைத்து நிற்பினும், அவற்றின் அறிதிறனோ ஓர் எல்லையுள் வாங்கும் அளவுடையது. இயல்வனவும் இயலாதனவுமாகிய இவற்றைக் கொண்டுதான் இறைவனின் உண்மை தெளியப்பெறு தல் வேண்டும். அத்தகு இறைவனின் ஒளியின் மேலும் வலியின் மேலும் அளாவி நிற்பவைதாம் இவ்வுலக உருண்டையும் இது போல் பிறவும். அவற்றின் மலர்ச்சியாகிய தோற்றத்தையும், கூம்புதலாகிய ஒடுக்கத்தையும் அறிவது அரியது; இயலாதது.

விரிப்பு: இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

அகச்செருக்கும் அறிவுச் செருக்கும் வினைச்செருக்கும் மிகுந்து அருளும், மெய்யறிவும், அடக்கமும் குறைந்துவரும் தற்காலத்து, இறைமை பொதுளிய இயற்கைத் தன்மையினை மறந்து வாழும் மாந்த உயிர்களுக்கு, உள்ளொளி கொளுத்தி உயிரியக்கம் சிறக்கக் கூறியதாகும் இப்பாட்டு.

இனி, 'செருக்கு' என்பது கருப்பையை யடைத்த கொழுப்புப் போலவும், வித்தை அளவு மீறி மூடிய வலிந்த தோல் போலவும் விளைவைக் கட்டுக் குலைக்கும் ஒருவகைத் திரிபுணர்ச்சியாகும். அகச் செருக்கு இயல்பான அகவளர்ச்சியையும், அறிவுச்செருக்கு உயிர்க ளின் மெய்யுணர்வையும், வினைச்செருக்கு வாழ்வடக்கத்தையும் கட்டுக்குலைத்துத் திரிபடையச் செய்யும். என்னை? நேராக வளரக் கூடிய ஒரு மூங்கில் அல்லது ஓர் உடல் திருகல் முறுகலாக வளர் வதைப் போன்றதே திரிபு என்க.

இனி, உலகின் அகப்புறச் சமயங்கள் அனைத்தும் இறைவ னின் இருக்கைபற்றிப் பலப்பலவும் கூறும். அவ்வச் சமயமும் அவ்வக் காலத்தே வாழும் மாந்தர்க்காக, அவ்வவ் விடத்தே வாழும் முதிர்வுற்ற மெய்யுணர்வினர் ஒருவர் அல்லது சிலரால் தோற்றுவிக்கப் பெற்றுக் காலக்கழிவில் பலராலும் பயிலப்பெற்றும் பயிற்றுவிக்கப்பெற்றும். வித்துருவினின்றும் அதைச் சுற்றியுள்ள கொட்டையும் சதைப்பும், நாறும், தோலும் எனப்படும் பொருள் உருவாய் வளர்ந்தும் பரந்தும் வருவதே ஆகும். எனவே எல்லாச் சமயத்துள்ளும் அகக்காழாய் இறையுண்மை இருப்பது போலவே புறக்காழாய் காலவெச்சங்களும், இடக் குற்றங்களும் மாந்தப் பிழைகளும் அமைந்தே இருக்கும். எல்லாச் சமயத்துள்ளும் அவை ஒரே படித்தாயும் இரா. ஒரே வகைப் பழம் பலமரத்தின்கண் பல் வேறு சுவையாயும், இனி அதுவே பல்வேறு நாட்டின்கண் வெவ் வேறு வடிவாயும் இருப்பது போலவே, இறையுண்மையும் சமயத் திற்குச் சமயமும், காலத்திற்குக் காலமும், இடத்திற்கு இடமும் மாறுபட்டு விளங்கும். இன்னுஞ் சொல்வதானல் பருப்பொருளாகிய பழத்தினும் நுண்பொருளாகிய இறைமை கால இடம் நோக்கி மிகவும் மாறுபடும். மாந்த இனத்திலேயே கற்கால மாந்தத்

தோற்றமும் தற்கால மாந்தத் தோற்றமும் மிகுதியும் வேறுபட்டு விளங்குவதை யாவரும் நன்கு அறியலாம். சுருக்கமாகச் சொன்ஞல் உலக அமைப்பை ஒரு சில மூலக்கூறுபாடுகளின் வேறு பாட்டுத் தோற்றமே என்பதை அறிவியல் மெய்ப்பிக்கும். இனி, மெய்யறிவியலோ அம்மூலக்கூறுபாடுகளும் ஒரே ஒன்றின் உள்ளீட்டுத் திரிபுகளே என்று வரை நிறுத்தும். அந்த ஒன்ருய் இருப்பதையே சமயம் இறைமை என்கிறது.

உலகியலில், ஒருவர்மேல் பிறிதொருவர் கொள்ளும் ஈடுபாடே பொதுமை என்றும், பற்றென்றும், நட்பென்றும், அன்பென்றும், அருளென்றும், காதலென்றும் பத்தி என்றும் வேறுபட்டு விளங்கி நிற்பது போல், அவ்விறைமைப் பொருளே இயற்கையென்றும், மூலப்பொருள்கள் என்றும், ஐம்பூதங்கள் என்றும், உலகென்றும் உயிர்கள் என்றும், மக்கள் பற்றென்றும், இனமென்றும், தொண்டென்றும் வேறுபட்டு விளக்கமாகப் பேசப்பெறுகின்றது.

ஓர் உழவன் நிலத்தை உழுது, வித்தி, விளைவிப்பது அவனுக்கும் பிறர்க்குமே. ஓர் அரசன் அரசியல் நடத்துவதும் அவனுக்கும் பிறர்க்குமே. தாயொருத்திக்குப் பிறக்கும் குழந்தை கூட அவளுக்கும் பிறர்க்கும் பயனுடையதாகும். ஆக இவ்வுலகத்தி லுள்ள எந்த ஓர் உயிரும் தனக்காகவும் பிறர்க்குமாகவே தோற்றம் எடுக்கின்றது. இக்கூட்டுச் சார்பு நிலையே இறைமையின் அகவியக்கமாகும். ஒரு தாயின் உடலினின்று ஒரு சேயின் உடலை அறிவியல் வேறுபிரித்துக் காட்டலாம். ஆனுல் ஒரு தாயினது மனத்தில் சுரக்கும் பிள்ளைப் பாசத்தையும் அப்பிள்ளைக்குள்ள தாய் பாசத்தையும், எந்த அறிவியலும் வேறு பிரித்து விட முடியாது. இனி, அத்தகு இரு பாசமும் வெவ்வேறு தாய்க்கும் பிள்ளைக்கும் வெவ்வேறு வகையாக - அவரவர் உயிர் விளைவுக்குத் தக்கபடி - சுரந்து வருவதையும் எந்த அறிவியலறிஞரும் கருவி வைத்து அளவிட முடியாது. இதன் இயக்கம் மட்டில் இயற்கையொடு பொருந்திய இயக்கமாக இறைமை இயக்கமாக மெய்யறிவியல் பேசும். இவை விரிக்கில் பெருகும். ஆனுல் இப்பாட்டின் உட்பொருளாய் விளங்கித் தோன்றும் இறைமையின் இருப்பை -அதன் தனித்த உருவை - நிலையினை - எவரும் அறிதற்கியலாது என்னும் உண்மையை ஒருவாறு விளக்கவே இவ்வளவில் கூறப்பெற்றது என்க. என்னை, எவரும் அறியப்பெருத ஒன்றினை

ஈண்டு நீவிர் மட்டும் அறியப் பெற்றதுபோல் பேசுவது யாங்ஙனம் எனில், அறியப் பெற்றது 'அறியப்பெறுது' என்பது தானே யன்றி, 'அறியப் பெறுத அறிவை' அன்று. இதனை இன்னும் சில படி மேலே விளக்குவோம்.

ஒன்றின் அல்லது ஒருவனின் 'அறியாமை' என்னும் நிலையில் அவனுக்குள்ள தன்மை வேறு. அவனைப் பற்றி நமக்குள்ள தன்மை வேறு. அவன் ஒன்றை 'அறியேன்' என்று நம்பால் எடுத்துச் சொன்னுலொழிய, அவன் அறியாமையை நாம் அறிந்து கொள்ளல் இயலாது. 'காந்தள் மலரைக் கண்டதில்லை' என்று ஒருவன் சொல்லும் வரை, அவன் காந்தள் மலரைக் கண்டுள்ளானு அல்லனு என்பதை நாமறிவது எங்ஙனம்? இனிக் 'கண்டேன்' என்று கூறினுலும் அவன் அதனை விளக்கினுலொழிய நமக்கு அது பற்றி விளக்கமுறுவது யாங்ஙன்? இனி அவன் முழுவதும் முற்ற விளக்கினுலும், நாமே அதனைக் கண்டு அறிவது போல் அத்துணை முழுவிளக்கமும் பெறுவது இயலுமோ? இனி, நாமே அதனை முழு அளவில் கண்டு கொண்டாலும் ஓர் இயற்கையியல் வல்லுநர் கண்டு அறிவதைப் போல் விளங்கிக் கொள்ள வியலுமோ? இனி, அவ் வியற்கையியல் அறிஞரும் ஒரு மூலிகை மருத்துவர் போல் அதிலுள்ள மருத்துவப் பயன்களைத் தேர்ந்து கொள்ளல் சாலுமோ? இனி அம் மருத்துவரும், அக்காந்தள் மலர்ச்செடி விளைவதற்கு வேண்டிய தட்ப வெப்பக் கூறுபாடுகளையும், கால இடவேறுபாடுகளையும் பயிரியல் அறிஞர் ஒருவரைப் போல் உணர்ந்துரைத்தல் முடியுமோ? —இவ்வாறு ஒரு பொருளைப் பற்றிய அறிவுக்கு எத்தனைப் படி நிலைகள் உண்டோ, அத்தனைப் படிநிலைகளும் அறியாமைக்கும் உரியனவாம் என்க. என்னை? பிந்தினவரின் முந்தினவர் படிப்படியாக அறியாமை மிக்கவராகத்தாமே கருதப்பெறுவர். முந்தினவரின் பிந்தின்வர் படிப்படியாக அறிவுமிக்கவராகத் தாமே கருதப் பெறுவர்.

எனவே, அறியாமையை அறியாதது ஓர் அறியாமை; அதனை ஓரளவு அறிந்த பின்னும் ஓர் அறியாமை. அறியாமையை அறியாமல் இருப்பவனை விட, அதனை அறிந்தவன் ஓரளவு மேல் என்ருலும் முழுநிலையைப் பொறுத்த அளவில் அவனும் அறியாதவனே. ஆகவே, இறைப்பொருள் அறியப்படாதது என்ருல், 'அறியப் படாத ஒன்று உமக்கு மட்டும் அறியப்பட்டது யாங்ஙன்?' என்னும் கேள்விக்குப் பொருளே இல்லாமல் போகிறது. அறியப்படாதது இறைமையின் தன்மையே யன்றி இறைமையின் உண்மை யன்று.

தாயின் கருப்பையுள் கிடந்தோம் என்ற உண்மையை நாம் அனைவரும் அறிவோம். அதன் தன்மையைநாம் அறிவோமா? இனி, தன்மையறியப்படாததால் அதன் உண்மையும் பொய்யாகுமோ? இனி உண்மை உணரப்பெற்றதால், அதன் தன்மையும் உணரப்பெறுவதாகத் தான் இருக்கவேண்டும் என்பதில்லை. இப்பொழுதுள்ள அறிவியல் இன்னும் நூறு பங்கு வளர்ந்தாலும், நாம் கருப்பையுள் கிடந்த பொழுதிருந்த நிலையை இக்கால் நமக்குப் புலப்படுத்திக்காட்டுதல் இயாலது. ஏனெனில் கருப்பையுள் நம் உடலுறுப்புகள் இருந்த நிலையிலேயே நம் அறிவுணர்வும் இருந்திருக்கும். அந்த நிலையை அறிவுணர்வு மிகுந்த நமக்கு உணர்த்துவது யாங்ஙன்? அப்படி உணர்வதுங் கூட இல்லாத நிலைதானே அது. கல்லுக்குக் கல்போல் கிடக்குந் தன்மையை உணர்த்துவது யார்?

எனவே, நம் அறிவின் எல்லை இறைவனைப்பற்றிய அறியாமையின் தொடக்கமாக அமைவதைக் கண்டு தெளிக. அவ்வறியாமை நிலை நம்மால் அறியப்பெறும் பொழுது, நமக்குள்ள புலன் உறுப்புகள், மூளைத்திறன்கள் யாவும் செயலற்றுப் போகும். இனி, இவ்வுலகின்கண் இருந்துகொண்டே இறைமைத் தோற்றத்தை அறிந்தவராகச் சமயக்குரவர் சிலர் எல்லாச் சமயத்தும் கூறியிருக்கின்ற தென்னை யெனின், அதைப் பற்றியும் சிறிது விளக்குவோம்.

அறிவு நிலையும் அறியாமை நிலையும் பல படி நிலைகளையுடையன என்பதுபற்றி முன்னரே அறிவோம். அறிவு நிலையில் உள்ள ஒருவர் அறியாமை நிலையில் உள்ள ஒருவர்க்குத் தாமே தம் அறிவு நிலையைப் புலப்படுத்திக் காட்டினாலொழிய அவ்வறியாமை நிலையில் உள்ளவர்க்கு அவ்வறிவு நிலை புலப்படாதாம் என்பதையும் நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஆகவே இறைப் பேரறிவு தானே மாந்த உயிரொன்றிற்குத் தன்னை விளக்கிக் காட்டவேண்டும் என்று கருத்துக் கொண்டு காட்டினால் ஒழிய, அது தன்னை அறிந்து கொள்ளல் எவர்க்கும் இயலாது. இனி அப்பேரறிவும், அறியாமையே மிக்குள்ள ஒரு மாந்த உயிர்க்கு, அது தன்னை எந்த அளவில் விளங்கிக் கொள்ள வியலுமோ அந்த அளவறிந்துதான் தன்னைப் புலப்படுத்திக் காட்டுமேயன்றித் தன்னை முற்றும் அவ்வுயிர்க்கு விளக்கிக் காட்டவும் செய்யாது. இனி, ஓர் எறும்போ ஒரு புழுவோ எவ்வளவுதான் தன் நிலையில் முன்னேறினாலும் நம்போலும் ஒரு மாந்த உயிரை அறிய விரும்பும் ஒரு நிலைக்குத்

தன்னை உயர்த்திக் கொள்ள முடியாது. அவ்வாறே உயர்த்திக் கொண்டாலும் அவ்வெறும்பின் மீமிசை அறிவுக்குப் புரியாத நிலையில் நாம் நம்மை விளக்கிவிட மாட்டோம். ஓர் அரையாண்டுக் குழந்தை 'தான் இவ்வுலகத்திற்கு வந்தது எப்படி' என்று நம்மைக் கேளாது. ஏனெனில் அவ்வாறு கேட்கவும் ஓர் அறிவு நிலை வேண்டும். ஒருகால், அத்தகைய அறிவு வளர்ந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் நிரம்பப்பெற்ற குழந்தை அந்தக் கேள்வியைக்கேட்பினும் அக்குழந்தை அக்கேள்விக்கான விடையை எந்த அளவில் விளங்கிக் கொள்ள வியலுமோ, அந்த நிலையில்தான் நாம் அதற்கு விளக்குவோமே யன்றி, நமக்கு அத்துறையில் விளங்கிய அனைத்தையும் விளக்கி விட மாட்டோம். அவ்வாறு விளக்கினாலும் அக் குழந்தைக்கு ஒவ்வொரு படி நிலையிலும் ஒவ்வொரு வகை அறியாமை வந்து இடை மறிக்கும்.

இறைமை நிலைக்கு நாம் சிற்றெறும்பினும் பல்லாயிரங் கோடி அளவில் எல்லா நிலையிலும் தாழ்ச்சியுற்றவர்கள். அளப்பதற்கரிதாய் விரிந்து கொண்டே போகின்ற இப்பேரரும் புடவியுள் கணக்கற்றுத் தாறுமாறாக ஓடிக்கொண்டிருக்கும் பேரண்டங்களையும் சிற்றண்டங்களையும் நம் உலகம் போல் உயிர்கள் சான்ற பல்லாயிரங்கோடி உலகங்களையும் தம்முள் ஒடுக்கிக் கொண்டு கிடக்கும் இறைப்பேராற்றல் எங்கே? குற்றுயிரும் குறுவினையும் கொண்டு மிக மிகக் குறுங்காலத்தில் வாழ்ந்து மடியும் நாம் எங்கே? நமக்கு அப் பேரிறைப்பொருள் தன்னைப் புலப்படுத்திக் காட்டுதல் எங்கே? அது தன்னைக் காட்டினாலும் நாம் அதனை அறிந்து கொள்ளுதல் எங்ஙன்? (இது பற்றி இன்னும் தெளிவாக உணர்ந்து கொள்ள இவ்விதழில் பிறிதோரிடத்தில் வெளியிடப் பெற்றிருக்கும் 'இறைக் காட்சி' என்னும் என் 'கற்பனை ஊற்று'க் கட்டுரையைக் காண்க.)

இனி, அச்சமயக் குரவர்கள் தாம் இறைவனைக் கண்டதாக உரைத்த நிலைகள் பொய்யாகுமே எனில், ஆகாது. அந்நிலைகள் அப் பெரியார்களின் மனக்கற்பிதங்களே! அஃதாவது அவர்கள் இறைப் பேராற்றலை எவ்வகையில் கற்பித்துக் கொண்டு பார்க்க விழைந்தனரோ, அவ்வகையில் கண்ட ஒரு கற்பிதத் தோற்றமே அக் காட்சி என்க! என்னை, ஒவ்வொரு சமயக்குரவரும் இறைப் பேராற்றலை அவரவர் விரும்பிய வடிவிலேயே கண்டுள்ளதாகக் கூறியுள்ளனரேயன்றி, எல்லார்க்கும் ஒரு வடிவே காட்சியுட்பட்டது

என்பது எங்கும் புலப்படுத்தப் பெறவில்லை. எனவே அவர்கள் தம் அறிவுக்கொப்ப அவர்கள் கண்டவை ஒரு வகை கனவுக் நிலைப்பட்ட கற்பிதக் காட்சிகளேயாம் என்று தெற்றெனத் தெளிந்து கொள்க. அக்காட்சிகள் முன்னிய மெய்யுணர்வுடைய உங்கட்கும் எமக்கும் கூட வரும். இனி, அக்காட்சிகள் போன்றனவே இவ்வுலகத் தோற்றங்களும். வானின்று கொட்டும் அருவியின் பேருருவமும், நிலவுலகையே பிளப்பது போல் இடிக்கும் பேரிடியின் பேரோசையும் அத்தகைய உணர்வு நிலைகளையே உருவாக்குகின்றன. அவற்றைக் கொண்டுதாம் நாம் இறைமையுணர்வு எய்திப் பல்வகை உருவ வழிபாடுகளைப் படைத்துக் கொண்டோம். ஆனால் அந்த நிலைகள் யாவும் இறைப் பேராற்றலின் இருக்கைநிலை யாகா.

இவற்றை உணர்த்தி நிற்பது தான் இப்பாடலின் 'எவன் கொல் அறிகும் இறையவன் கிடக்கை' என்னும் முதல் வரியாகும்.

கிடக்கை என்பது புறக்கிடக்கையை உணர்த்துதல் போலவே அகக்கிடக்கையையும் உணர்த்தும்.

புறக்கிடக்கை இருப்புநிலையையும் அகக்கிடக்கை விருப்பு நிலையையும் உணர்த்தும். உணர்த்தவே, இறைவனின் இருப்பு நிலையை யாவர் அறிவர் என்பதாகவும், அவன் விருப்பத்தை அறிவர் யாவர் என்பதாகவும் பொருள் கொள்க. —(தொடரும்)

வெளி வந்து விட்டது!

தென்மொழி அன்பரும் புரக்குநருமான

பாவலர் முல்லைவாணன்

அவர்களின் பாடல் தொகுப்பு நூல்

" தமிழருவி "

விலை: 4-00 உருபா

மொழிஞாயிறு பாவாணர் அவர்களின் அணிந்துரையும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் மதிப்புரையும் நூலை அணி செய்கின்றன.

பதிவஞ்சலில் வேண்டுவோர் உருபா 5-25 விடுக்க.
விற்பனையாளர் 15% கழிவு நீக்கி 10 படிகட்கான முன் தொகையுடன் எழுதுக.

தென்மொழி, கடலூர்-1, தெ. ஆ.

தமிழ் இலக்கிய நிகழ்ச்சிகள்.

நீடாமங்கலம், உயர்நிலைப்பள்ளி

இலக்கிய மன்றத் தொடக்கவிழா.

கடந்த துலைத்திங்கள் 18-ஆம் பக்கல் (4-11-71) தஞ்சை மாவட்டம் நீடாமங்கலம் உயர்நிலைப் பள்ளியின் இலக்கிய மன்றத் தொடக்கவிழா, சந்தான இராமசாமி கோவில் திருமண மண்டபத்தில், நீடாமங்கலம் துணைப்பதிவாளர் திரு. சி. பழனியாண்டி. க. இ. அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அவ்விழாவில் பாவலர் திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் 'இலக்கியமும் வாழ்வும்' என்பது பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். பள்ளி மாணவ மாணவியர்களும் ஊர் மக்களும் ஏராளமாகக் கூடியிருந்து சொற்பொழிவை அமைதியாக கேட்டனர். பள்ளி மாணவர்களிடத்தில் இக் கூட்டத்தால் பெரும் பயன் ஏற்படும் என்று ஆசிரியர்கள் கருத்தறிவித்தனர்.

திருச்சி, பெரம்பலூர்

தமிழ் மன்றக் கூட்டம்.

கடந்த துலை 28-ஆம் பக்கல் (14-11-71) ஞாயிறன்று பெரம்பலூர் தமிழ் மன்றச் சிறப்புக்கூட்டம், கடைவீதிச் சத்திரத்தில் இனிதே நடைபெற்றது. மன்றப் பொருளாளர் மறைத்திரு, சா. இலாரன்சு அடிகள் தலைமை தாங்கினார். தென்மொழி ஆசிரியர் பாவலர் திரு பெருஞ்சித்திரனார், பாவேந்தரின் பாட்டுத்திறம் என்பது பற்றிச் சுவையானதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார். கூட்டத்திற்கு அவ்வூர் சட்டமன்ற உறுப்பினர் உட்பட ஊர்ப் பெரியவர்கள் பலரும் வந்திருந்தனர். செயலர் திரு. அமலன் அவர்கள் நன்றி கூறினார்.

வாழ்க தமிழரிமா!

தென்மொழி *வளர்ச்சியிலும் வாழ்விலும் ஆர்வமும் அக்கறையும் கொண்டு அதற்குப் பல்லாற்றானும் துணை நிற்கும் திருவினர்* **நாரா. மகிழ்நன், குமுதம் (உரிமையாளர் 'குமுதம் முகவாண்மை' திருச்சி-14)** *அவர்களுக்குக் கடந்த கன்னி 2 (18—9—71) இல் ஆண்மகவு பிறந்து* **தமிழரிமா** *என்று பெயரிடப் பெற்றது. குழந்தை* **தமிழரிமாவும்** *அத்தமிழ்க் குடும்பமும் எல்லா நலமும் பெற்று இனிதே வாழ வாழ்த்துகிறோம்.* —**ஆசிரியர்.**

சிலம்பில் கால உணர்வு - ஒரு குறிப்பு

—பர். ச. வே. சுப்பிரமணியன், க. மு.
தமிழ்த்துறைத் தலைவர், திருவனந்தபுரம் பல்கலைக்கழகம்.

'காலம்' என்ற சொல், கால் என்ற அடியில் தோன்றியிருக் கலாம். முதலும் முடிவும் அறிய இயலாத காற்றைப் போன்று விரைகின்றது காலம். இக்கால வெள்ளத்தின் ஒரு சிறு துளியைத் தன் வாழ்க்கை நிகழ்வுகளால் அளவிடுகிறான் மாந்தன். இவ்வாழ்-வின் சில பல நிகழ்ச்சிகளைத் தேர்ந்து புனைவது இலக்கியம்.

சிறுகதை, புதினம், பாவியம் என்றின்ன இலக்கிய வகை களுக்கு வேறுபட்ட கால அளவைகள் உள. ஒரு நிகழ்ச்சியைக் கருவியாகக் கொண்டு அமைப்பின் சிறு கதை சிறக்கும். வாழ்க்கை யின் ஒரு பகுதி புதினத்திற்குத் தக்க கரு. பாவியம் வாழ்க்கையை முழுமையாகத் தரும் அமைப்புடையது.

மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையுங் கொண்-டமைந்த சிலப்பதிகாரம் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளின் நிகழ்வைத் தருவது. பன்னிரண்டாண்டு அகவையளாய், மண மகளாய் அறிமுகப்படுத்தப் பெறும் கண்ணகி சில்லாண்டு[1] கண-வனுடன் வாழ்ந்து, ஏறத்தாழப் பன்னிரண்டு ஆண்டுகள்[2] பிரிந்து, பின்னர் ஏறத்தாழ ஒன்றரைத்திங்கள்[3] உடனுறையப் பெற்றுக், கணவனை இழந்து பதினான்கு நாட்கள் அலமந்து இறுதியில் வானடைந்து, ஐந்தாண்டு[4] முடிவில் குட்டுவனால் கோயில் எடுக்கப்பெற்று இறவாத் தமிழுடன் கற்புச் செல்வியாக நிலைத்து விட்டாள்.

இளங்கோவடிகளும் கால உணர்வும்:— இந்தக் கால ஓட் டத்தை இளங்கோவடிகள் எவ்வாறு அமைத்துள்ளார்? காலத்தைக் கணக்கிட்டு உரைப்பது வரலாற்றாசிரியனுக்கு மிகத்தேவை. இலக் கியப் புலவன் தனக்குத் தேவையான அளவு தரலாம். இந்நிலையில் இளங்கோவடிகள் வெளிப்படையாகத் தந்துள்ள குறிப்புகள் மிக அருகியவை.

திருவனந்தபுரம் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை ஆண்டு (1970) மலரில் வெளியிடப்பெற்ற கட்டுரை.

அ: யாண்டுசில கழிந்தன இற்பெருங் கிழமையிற்
காண்டகு சிறப்பிற் கண்ணகி தனக்கென் [2:89-90]

ஆ. சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென [5:64]

இ. ஆடித்திங்கட் பேரிருட் பக்கத்
தழல் சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண [23:133-5]

ஈ. எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது [27:149]

உ. காலை முரசம் கனைகுரல் இயம்ப [14-14:18-1-6]

ஊ. மாலைமணி விளக்கம் காட்டி இரவிற்கோர்
கோலங் கொடியிலடையார் தாங்கொள்ள [9:3-4]

எ. வண்டார் இருங்குஞ்சி மாலைதன் வார்குழல்மேல்
கொண்டாள் தழீஇக் கொழுநன்பாற் காலைவாய்ப்
புண்டாழ் குருதி புறஞ்சோர மாலைவாய்க்
கண்டாள் அவன் தன்னைக் காணாக் கடுந்துயரம் [19:35-38]

போன்ற பகுதிகள் இளங்கோவடிகள் கால உணர்வையும் கருத்தில் கொண்டிருந்தார் என்பதற்குச் சான்று பகருகின்றன.

காதைகளும் கால அமைதியும்:— *ஒரு வாழ்வின் பெரும் பகுதியைக் கொண்டு அமையும் இப்பாவியக் கதை சில நாட்கள் நிகழ்ச்சிகளையே மையமாகக்கொண்டுள்ளது. ஏறத்தாழப்பதினெட்டுக் காதைகள் கிட்டத்தட்ட எட்டு நாட்களின் நிகழ்ச்சிகளையே தரு கின்றன.*[5] *இவ்வாறு நாள் நிகழ்ச்சிகளாகப் பல காதைகளை அடிகள் இரு பயன் கருதி அமைத்துள்ளார்.*

[1] *பாவியத்தின் திருப்புப் புள்ளி, உச்சகட்டம் போன்ற விறு விறுப்பமைந்த பகுதிகளில் ஒரு நாள் நிகழ்ச்சிகளே பல காதைகளில் பேசப்படுகின்றன. இதன் பயனாகிய நாடகக் கூறுகளாகிய இட, கால, செயல் உணர்வுகளில் ஒருமைகள் பொருந்தி, பாவியமும் நாடகப் பாவியமாக உருப்பெற்று விடுகிறது.*

[2] *காலச் சுழற்சியில் மாறி மாறி வரும் ஒத்த நிகழ்ச்சிகளை ஒரு நிகழ்வினால் தந்து அமைதல்,*

காட்டாகக் கோவலன் மாதவியோடு வாழ்ந்த பல்லாண்டுகளில் வந்து சென்ற 'மாலைகள்'பல. அந்தி மாலைச் சிறப்புச் செய்காதை ஒரு மாலைக்காட்சியைத் தந்து அனைத்தையும் சுட்டி விடுகிறது. இவ் வுத்தி இளங்கோவடிகளுக்கு உரியது என்பதை,

உலவாக் கட்டுரை பலபா ராட்டி
தயங்கிணர்க் கோதை தன்னொடு தருக்கி
வயங்கிணர்த் தாரோன் மகிழ்ந்து செல்வுழிநாள் [2:81-83]

என்ற பகுதி சுட்டும். ஆண்டு தோறும் புகாரில் இந்திர விழா நிகழும், ஆயின் அடிகள் மாதவி ஆடிய கடைசி இந்திர விழாவைக் காட்டுவதுடன் அமைகிறார்.

காலமாற்றம்:– ஒரே வேளையில் நிகழ்ந்த நிகழ்வுகளை அடுத்தடுத்து அமைக்கும் பாங்கு இளங்கோவடிகளிடம் உண்டு. காட்டாகக் **கொலைக்களக்காதை** [16], **ஆய்ச்சியர்குரவை** [17]. பல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தவற்றைத் தேவைக் கேற்பத்தரும் நிலையையும் காண்கிறோம். **அடைக்கலக்காதையிலும் நீர்ப்படைக்காதையிலும்** மாடலன் வாயிலாக இதனை இளங்கோ அமைக்கிறார்.

மணிமேகலை பிறந்து ஏறத்தாழப் பதினோராண்டுகளுக்குப் பின்னரே மணிமேகலைக்குப் பெயரிட்ட நாள் விழாவை ஒட்டி நிகழ்ந்தவற்றைக் காட்டி, கோவலன் சிறப்பையும் மணிமேகலை பிறந்த செய்தியையும் தருகிறார். [15:21–94].

கோவலன் கண்ணகிக்கு உற்றதை உணர்ந்த அவரைச் சார்ந்தோர் பட்டதை ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்குப் பின்னர் மாடலன் குட்டுவனுக்குக் கூறும் முகமாகத் தருகிறார். (27:74–108). இது போன்றே பின்னிகழ்வதனை முன் சுட்டுவதும் ஒருவகைக் காலமாற்றம் எனலாம். கண்ணகி, கோவலன் கனவு இத்தகு நிலையில் அமைகிறது.

பாவியச்சுவையும் கால உணர்வும்:— மாந்தனின் இன்ப துன்ப உணர்வுகளைக் காலவுணர்வோடும் ஒட்டிப்பார்க்கலாம். இன்ப நிகழ்ச்சிகள் விரைந்து சென்றுவிடும், இந்த அடிப்படை உண்மையை அடிகளின் காதை அமைப்பு தெளிவாக்கும். கண்ணகியுடன் வாழ்ந்த எட்டாண்டுகளும், மாதவியுடன் வாழ்ந்த பன்னிரண்டாண்டுகளும் கோவலனுக்கு விரைந்து சென்ற நாட்கள். மாதவி தந்த மகிழ்வு மாலையின் மறைவை ஒத்து விரைந்து மறைந்து விட்டது. சிறுபொழுதில் [**அந்தி மாலைச் சிறப்புச்செய் காதை**] கூட்டம் சுட்டப்படுகிறது. இன்பம் அமைகிறது. பெரும் பொழுதில் பிரிவு நிகழ்கிறது. **வேனிற்காதை** (8.) **முதல் அழற்படுகாதை** (22) வரை துன்பச் சூழல். இருமாத நிகழ்வுகளுக்காகப் பதினைந்து காதைகள், ஒதுக்கப்படுகின்றன. குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த மனச் சுமையுடன் செல்லும் கோவலன், கணவனை இழந்த கண்ணகி இவர்களுக்குஇவ்விருமாதங்கள் எத்துணைநீண்டனஎன்பது சுட்டப்படுகிறது.

உறுப்பினர் படைப்பும் கால அமைதியும்:— கோவலனை மூன்று கோணங்களில் காண்கிறோம். இல்லாளொடு தருக்கி வாழ்ந்தவன், கலை மடந்தையாம் மாதவியைப் பெற்று விடுதலையறியா வேட்கையினன், பொருள் தேடும் வேட்கையுடையவன். ஒருவன் முக்குணங்களை உடையவனாகக் காட்டப்படுகிறான். இவ்வேறுபாடு அமையக் காரணம் யாது? அவனது அகவையைக் கருத்தில் நிறுத்தி நோக்கினால் தெளிவு கிடைக்கக்கூடும்.

பதினாறு அகவையினனாம் கோவலன் பெற்றோர் அமைத்த வழி இல்வாழ்வில் ஒழுகியவன், இருபத்துநான்கு அகவையில் தன்னிடம் பொருந்திய கலை உணர்வுக்குத் தக்கத் துணையைத் தேடும் உரிமை வேட்கையன். முப்பத்தாறும் அகவை எட்டியபோது இன்பம், கலை, கேளிக்கை இவற்றை விடத் தனது உடைமை, பெருமை இவற்றை நாடும் முதிர்ச்சி அடைந்தவன்.

இவ்வாறு பாவியத்தில் கால அளவை (Time span) அறுதியிட்டு நோக்கும் போது பாவிய அமைப்பிற்கும் சுவைக்கும் ஏற்ப அடிகள் இதனை அமைத்த நிலையும், இதனோடு பொருத்தி, உறுப்பினர் பண்பை உய்த்து உணரவைத்த நுட்பமும் அறியலாகும்.

அடிக்குறிப்பு

1. 'யாண்டு சில கழிந்தன' [2:89] என்பதனை விளக்கும் அடியார்க்கு நல்லார்'கண்ணகிக்குச்சிலயாண்டு கழிந்தனவெனவே மாதவிக்குப் பலயாண்டு' கழிதலும் கொள்ளப்பட்டது. இன்னும் மேற்கனாத்திறமுறைத்த காதையில், தேவந்தி 'கண்ணகி நல்லாளுக்-குற்ற குறையுண்டென்று" [41] என்புழி எச்சவும்மை விரிக்க இவட்கு அவள் இளமைப் பருவந் தொடங்கி நிகழும் பார்ப்பனத் தோழியாய் மாநாய்கன் மனைவளர்தலின் ஒரு காலத்தே குடிபுக்குச் சென்றுழி பிரிவும் ஒரு காலத்திராயிற் றென்பதாகலின், நாலீராண்டு நடந்ததற் பின்னர்'' (30:85)என்பதனை இருவர்க்குமாக்கி மாதவிக்கு எட்டினிறந்த பல யாண்டு சேரலிற் கண்ணகிக்குச் சில யாண்டு கழிந்தவெனப் பொருள் கூறலுமொன்று, இதனான் மிக்க பயமின்று; ஏற்குமேற் கொள்க இது போலி' என எழுதுகின்றார். எட்டு, ஆண்டுகள் என்பதை மறுத்து இத்தனை ஆண்டுகள் எனத் தெளிவாகக் கூறுதற்குரிய சான்றுகள் இன்மையால் இதைக் கொள்வது தகும்.

2. கண்ணகியைப் பிரிந்து உறைந்தது பன்னிரண்டு ஆண்டுகள் என்று கூறின் மாதவியோடு பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தான் என்பதே பெறப்படும். கோவலன் மாதவியைப் பிரியும் போது மணிமேகலைக்கு அகவை 11 இருக்கலாம். அதைக் கீழ்க்கண்ட பகுதிகள் நிலை நாட்டும்.

[அ] மாமலர் வாளி வறுநிலத் தெறிந்து
காமக் கடவுள் கையற்று ஏங்க
அணிதிகழ் போதி அறவோன் தன்முன்
மணிமே கலையை மாதவி அளிப்பவும் [15:101-104]

[ஆ] மற்றது கேட்டு மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான்துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணா தொழிகெனக்
கோதைத் தாமம் குழலோடு களைந்து
போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும் [27:103-107]

[இ] மணிமே கலைதன் வான்துற வுரைக்கும்
ஐவகை வகுக்கும் பருவங் கொண்டது
செவ்வரி ஒழுகிய செழுங்கடை மழைக்கண்
அவ்விய மறிந்தன அதுதான் அறிந்திலள்
ஒத்தொளிர் பவளத் துள்ளொளி சிறந்த
நித்தில இளநகை நிரம்பா அளவின
புணர்முலை விழுந்தன புல்லகம் அகன்றது
தளரிடை நுணுகலந் தகையல்குல் பரந்தது
நிறங்கிளர் சீறடி நெய்தோய் தளிரின
தலைக்கோ லாசான் பின்னுள ளாகக்
... ...
... ...
உருவி லாளன் ஒரு பெருஞ் சிலையோடு
விரைமலர் வாளி வெறுநிலத் தெறியக்
கோதைத் தாமம் குழலோடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள் [30:9-28]

[3] கோவலன் கண்ணகி மதுரைக்குப் புறப்பட்ட காலத்தைக் குறிக்கும்போது (10:1-3) நல்லார், 'என்பது அந்தச் சித்திரைத் திங்கட் புகுதி நாள்-சோதி-திதி-மூன்றும் பக்கம் - வாரம்-ஞாயிறு: இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பூரணியுங் கூடிய சனிவாரத் திற் கொடியேற்றி நாலேழ் நாளினும் [மணி. 1:8] என்பதனுன் இரு பத்தெட்டு நாளும் விழா நடந்து கொடியிறக்கி வைகாசி இருபத்-தெட்டினிற் பூருவ பக்கத்தின் பதின்மூன்றும் பக்கமும் சோம வாரமும் பெற்ற அனுடத்தில் நாட்கடலாடி ஊடுதலில் வைகாசி இருபத்தொன் பதிற் செவ்வாய்க்கிழமையும் கேட்டையும் பெற்ற நாசயோகத்து நிறைமதிப் பதினாலாம் பக்கத்து வைகறைப் பொழுதினிடத்து நிலவு பட்ட அந்தரத் திருளிலே யென்றவாறு'

விடை [வைகாசி] 28 முதல் கடக [ஆடி) த் திங்கள் பேரிருட் பக்கம்வரை ஏறத்தாழ ஒன்றரைமாதங்கள் எனக் கொள்ளலாம்

(4) பிறையோர் வண்ணம் பெருந்தகை நோக்க
இறையோன் செவ்வியற் கணிஎழுந் துரைப்போன்
எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண்ணாள் வேந்தே வாழ்கென் றேத்த [27:147-150]

செங்குட்டுவன் பத்தினிப் படிமத்தை நீர்ப்படுக்கும் போது வஞ்சியினின்றும் நீங்கி 32 மாதங்கள் ஆயின என்று கூறுவதி-லிருந்து திரும்பும் காலத்தைக் கணக்கிட்டு ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் எனக் கணக்கிட்டுள்ளேன்.

5. அட்டவணை

காதைகளும் காலமும்

காதை	நாள்	திங்கள்	ஆண்டு	அகவை கண் ணகி	கோ வலன்	மா தவி
புகார்க் காண்டம்						
1. மங்கல வாழ்த்துப் பாடல் }						
1. மனையறம் படுத்த காதை }	1		8	12	16	
3. அரங்கேற்று காதை	1			20	24	12
4. அந்திமாலைச்சிறப்புச் செய் காதை	1	(மாலை)	12			
5. இந்திரவிழவூரெடுத்தகாதை		(சித்திரை திங்கள் சித்திரை நாள்)				
6. கடலாடு காதை						
7. கானல் வரி						
8. வேனிற் காதை	1					
9. கனாத்திறம் உரைத்தகாதை						
10. நாடுகாண் காதை }						
மதுரைக்காண்டம்						
11. காடுகாண் காதை						
12. வேட்டுவவரி......	1					
13. புறஞ்சேரி இறுத்த காதை						
14. ஊர்காண் காதை }	1					
15. அடைக்கலக் காதை }		2		32	36	24
16. கொலைக்களக்காதை }					மணிமேகலை	11
17. ஆய்ச்சியர் குரவை						
18. துன்பமாலை						
19. ஊர்சூழ்வரி	1					
20. வழக்குரை காதை						
21. வஞ்சினமாலை						
22. அழற்படுகாதை }						
23. கட்டுரை காதை	14					
வஞ்சிக் காண்டம்						
24. குன்றக்குரவை	1					
25. காட்சிக்காதை		கடகம் (ஆடி) காருவா(அமாவாசை)				
26. கால்கோட்காதை			5			
27. நீர்ப்படைக் காதை						
28. நடுகற்காதை						
29. வாழ்த்துக்காதை						
30. வரந்தரு காதை						



"அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ? ஆங்குசிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ—முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறுய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!"

பாவைப் பாடல்கள்

ஆசிரியர்: திரு. உரு. கசுத்தூரி, க. மு.

கிடைக்குமிடம்:- செயக்குமாரி விற்பனையகம் (Stores)
அறமன்றச் சாலை, (Court Road) நாகர்கோவில்–1.

விலை: உரு. 3-00

சிற்றிலக்கிய அமைப்புடையவும், மகளிர்க்கே உரிமை வாய்ந்தவுமான பாவைப்பாடல்கள் கழகக் காலம் முதல் இற்றைநாள் வரையில் தோன்றி வளர்ந்து வழங்கிவருதலையும், பாவையென்னுஞ் சொல்லாற் குறிக்கப்பெறும் பல்வேறு பொருள்களையும், பாவை நூல்களிற் குறிக்கப்பெறும் பல்வேறு செய்திகளையும், அவற்றின் ஆசிரியர்கள் பற்றிய செய்திகள், காலம் முதலியவற்றையும் விளக்க முயலுவதே இந்நூல்.

ஆண்டாள் மாணிக்கவாசகர் பற்றிய செய்திகளை முதற்கண் கூறிவைத்துப் பின் பாவை பற்றி ஆராய்ச்சியைத் தொடங்குவது பொருளடக்க வரிசை முறையின் கட்டுக்கோப்புக்குப் பொருத்தமாய் இல்லை. மேலும் திருவெம்பாவையின் காலம் 6–ஆம் நூற்றுண்டுக்கு முற்பட்டதென்பர் என்று (பக்: 8) கூறிப், பின் 9–ஆம் நூற்றுண்டு என்பார் கூற்றை வாளா உடன்பட்டுத் தம் கூற்றுகக் கூறியுள்ளமை (பக்: 27) இருவர் மாறுகோள் ஒருதலைத் துணியும் முறைமையறியாமையைச் சுட்டி நிற்கின்றது.

திருவெம்பாவையின் முதற்பாட்டின் முதலடியிலும், பத்தாம் பாட்டின் முதலடியிலும் இறைவனின் தோற்றமும் இறுதியுமற்ற நிலையைப் பொதுவாகவும், உருவகமாகவும் சுட்டுவதன்றி அடிமுடி தேடியமை சுட்டப் பெறவில்லை. பேதையொருபால் என்ற விடத்தும் உருவகம் சுட்டப்பட்டதன்றிப் பிருகு முனிவன் கதை சுட்டப் பெறவில்லை. மெய்ப்பொருளை யுட்படுத்தி உருவகங்களும், உருவகங்களைச் சார்ந்து பழங்கதை (புராணங்) களும் தோன்றுவனவாம். அவை யாவற்றையும் ஒருபடியவாக் கோடல் பொருந்தாது. திரு

வெம்பாவையின் இறுதிப்பாடலில் அடிமுடி தேடிய வரலாறு சுட்டப் பெறுவது இந்நூலாசிரியர் குறிப்பில் இல்லை.

"கழகப் பாடல்களில் உணர்ச்சியிருக்குமேயன்றி ஊனும் உயிரும் உருகத் தக்க உருக்கம் பெரும்பாலும் அமைவதில்லை" யென்று குறிப்பிடப் பெற்றுள்ளது (பக்;102). உணர்ச்சியென்பது அனைத்துச் சுவைகட்கும் பொதுவாய்ப் பாவின் உயிரோட்டமாய் இலங்குவது; மற்று உருக்கமோவெனின் பாவின் பொருட்சுவையைப் பொறுத்தே அமைவதாம். எல்லாவற்றிலும் உருக்கம் இருத்தல் வேண்டுமென்றல் ஆகாது. அன்றியும், 'இளையோர் சூடார்' எனவும் 'சிறியகட் பெறினே'யெனவும், 'அற்றைத் திங்க'ளெனவும் வரும் புறப்பாடல்களையும் இன்னோரன்னவற்றையும் உணர்ந்து பார்க்க.

திருவெம்பாவை ஆராய்ச்சியில் காளமேகப் புலவரையும், அவரது பரம்பொருள் விளக்கத்தையும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். மேலும் இலக்கியத்தரம் என்னும் பகுதியில் திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்கள் மட்டுமேஆராயப் பெற்றுள்ளன;செந்தமிழ்ப் பாவை ஈருன ஏனையவை அங்ஙனம் ஆராயப்பெறவில்லை. இவை நூலின் முழுமையற்ற நிலையையே காட்டி நிற்கின்றன. அன்றியும் நூலின் இறுதியில் திருவெம்பாவை, திருப்பாவை, சமணத்திரு-வெம்பாவை களின் மூலப்பாடல்களை அச்சிட்டிருத்தல் மிகப் பயனுடையதேயாயினும், செந்தமிழ்ப்பாவை சமயச் சார்பற்றது என்ற கரணியத்தால் அவ்வாறு அச்சிடாமல் புறக்கணித்திருப்பது நூலுக்குக் குறைபாட்டையும், நூலாலாசிரியர்க்கு இழுக்கையும் சேர்ப்பதாகும்.

வெளிநாடுகளில் திருவெம்பாவையைத் தவிர, ஏனையவும் சென்று வழங்கின் சான்று காட்டல் வேண்டும். அவ்வாறன்றிப் பொதுப்படக் கடல் கடந்த பாவைப்பாடல்கள் என்பது [பக்: 137] மயக்கந் தரத்தக்கதாகும். மேலும் "திகழ்வது அவள் பாடல்கள்" [பக்: 7] என்பது போன்ற பால்வழுக்களும், ''தம்மை தலைவன்'' [பக்: 95]என்பது போன்ற ஒற்றுப்பிழைகளும், பிழைத்திருத்தத்துள்ளும் அடங்காமல் "பவை நோன்பு''[பக். 114] என்பது போன்றுள்ள அச்சுப்பிழைகளும் ஆங்காங்கு மலிந்துள்ளன.

தமிழின் பல்துறையிலும் ஆய்வுநூல்கள் வெளிவருதல் இன்றியமையாத தாகலின், அவ் வகையில் இப் ''பாவைப் பாடல்கள்" வரவேற்கத் தக்கதே ஆயினும் குற்றங்குறைகளை முற்றக் களைதல் வேண்டும். ஆசிரியரின் முதல்முயற்சியே இந்நூலாகத் தெரிதலின் அவற்றைப்பொருட்படுத்தாது அவரின் ஆய்வுத்திறனைப் பாராட்டலாம்.

—இறைக்குருவன்.

முன்னிதழ்த் தொடர்ச்சி:-

சீவக சிந்தாமணி-ஒரு பெரும் பாவியம்.

—பேரா. மு. வை. அரவிந்தன் கீ. க. மு.

தேவர் படைத்த உலகம்: கலைஞர்கள் படைக்கும் கற்பனை உலகம், நாம் வாழும் உலகத்தைவிடச் சிறப்பு வாய்ந்தது. கற்பனை உலகத்தில் பூத்து மணக்கும் மலர்கள் என்றும் வாடுவதில்லை. அருவிகள் வற்றிப் போவதில்லை. செடி கொடிகள் வளர்ந்து மடிவதில்லை. அந்த உலகத்தில் வாழும் உயிர்வகைகளுக்கு என்றும் சாவில்லை. கலை உள்ள அளவும் அங்குள்ள மக்கள் வாழ்ந்துகொண்டே இருப்பார்கள்.

திருத்தக்க தேவர் படைத்துள்ள பாவிய உலகம் அழிவில்லாதது. அவருடைய திருவுள்ளம் சோலையாய்ப் பூத்து, கார்முகிலாய்ப் பொழிந்து, அருவியாய்ப் பெருக்கெடுத்துப் பல்வேறு வடிவம் கொண்டுள்ளது. நீலவானமும் சுடர் ஒளிக் கதிர்களும் விண்மீன்களும் வானவில்லும் முகிலும் மின்னலும் அவர் உள்ளத்தில் இடம் பெற்றுள்ளன. பல்வேறு இயற்கை வளமும் ஐவகை நிலங்களும் நீலத்திரைக் கடலும் வானளாவிய குன்றமும் அவர் உள்ளத்தில் படைப்புகளாய்ப் பொலிகின்றன. அவருடைய உள்ளத்தில் பெரிய உலகம் ஒன்று கருக்கொண்டு வளர்ந்து பாவியமாய் உருவெடுத்துப் பிறந்திருக்கின்றது.

சீவக சிந்தாமணியில் பலவேறு பண்புள்ள மக்களைக் காண்கின்றோம். பலவேறு வகையான வாழ்க்கைச் சிக்கல்களைக் காண்கின்றோம். ஒருவர் வாழ்விலேயே பல வேறு நிலைகளைக் காண்கின்றோம். சிற்றின்பத்தில் மூழ்கி அரசியலைப் புறக்கணித்து அரசும் உயிரும் இழக்கின்ற மன்னன்; மன்னனைக் கொன்றுவிட்டு நாட்டைக்கைப்பற்றும் வஞ்சக அமைச்சன்; சுடுகாட்டில் ஆண்மகவைப் பெற்றுத் தனியே புலம்பும் அரசி; இறந்த மகனைப் புதைக்கச் சுடுகாட்டிற்கு வரும் தந்தை, வேறு ஒருவர் நிழலில் ஒதுங்கி மறைவாக வளரும் இளவரசன்; நண்பனுக்காக உயிரையும்கொடுக்க முன்வரும் நண்பன்: மாணவனைப் பெரிதும் மதித்து நல்வழி காட்டும் ஆசிரியர்; ஆனிரை கவரும் வேடர்; தம் ஆக்களை இழந்து புலம்பும் இடையர்; கலங்கவிழ்ந்து துன்புறும் வணிகன்; இசைக்கலையில் தேர்ந்து விளங்கும் கலையரசி; சுண்ணப் பொடியால் மனம் வேறுபட்டுப் பிரியும் பெண்கள்; ஒழுக்கமற்ற மனைவியிடம் தீராக் 'காதல்' கொண்டுள்ள பேதைக் கணவன்; கட்

குடத்தை ஏந்திக்கொண்டு மனைவியரோடு திரியும் களிமகன்; கிளியைத் தூது விடும் இளங்காதலர்; காமுகன் காமத்திற்கு இரையாகிப் புலம்பும் ஆடல் மகள்; மனைவியரோடு காட்டில் இருந்து நோற்கும் துறவிகள்; விலங்குகளைக் கொன்று தின்னும் வேடன்; மகனைக் கண்டதும் துள்ளி எழும் தாய்; காதலனைப் பிரிந்து புலம்பும் மகளிர்; கன்னியாகவே வாழ உறுதி கொண்ட ஒருத்தியைப் பற்றிப் பேசித் தம் நண்பனைத் தூண்டிவிடும் காளையர்; பந்தாடும் இளநங்கை – இன்னும் இன்னும் எத்தனையோ வகை மாந்தரைக் காண்கின்றோம்.

மாமனும் மருகனும் போல் அன்பு பூண்டு நடக்கும் பெருமிதப் பகடும், செந்தாமரையில் உறங்கும் வெள்ளோதிமமும், அந்தணர் சமைத்து வைத்த சோற்றுத் திரளில் வாய்வைத்து அடிபட்டு நீரில் விழுந்து கிடக்கும் நாயும், வெறிகொண்டு திரியும் யானையும், தினைக் கதிரில் காதல் மடலை மறைத்துக்கொண்டு தூது செல்லும் கிளியும், தோகையர் கூந்தலைக்கண்டு நாணும் மயிலும், சுண்ணப்பொடி நுகரும் வண்டுகளும், பலாப் பழத்தை மகிழ்ந்து உண்ணும் குரங்குகளும், காதலர் ஊடல் தீர்ந்து கூடி மகிழத் துணைசெய்யும் பூவைகளும் தேவர் பாவியத்தில் வாழ்கின்றன.

இன்பத்திற்கு இருப்பிடமான அரண்மனை, எந்திரம் அமைந்த ஓங்கி உயர்ந்த மதில், முதலைவாழும் அகழி, அறிஞர் கூடி ஆராயும் பேரவை, வெற்றி முரசு முழங்கும் போர்க்களம், மகளிர் பந்தாடும் இடம், கொடிய விலங்குகள் வாழும் காடு, இசைப்போட்டி நிகழும் மண்டபம், திரிபன்றி எய்வோர் அமர்ந்திருக்கும் கூட்டம், மக்கள் கூடி மகிழும் மணவறை, பேய் நுடங்கி ஆடும் சுடுகாடு, துறவிகள் வாழும் அறப்பள்ளி– முதலிய இடங்களைத் தேவர் நூலில் காணலாம். மயிற்பொறி, எந்திரப்பன்றி, போர்க்கருவி, யாழ், பந்து சிப்பு, சுண்ணம், அஞ்சனம், உண்டி வகைகள், ஆடையணிகள் ஆகியவற்றைச் செய்து தரும் பல்வேறு கலைஞர்களை அங்கே காணலாம். பருவங்களும் சிறு பொழுதுகளும் அப்போது ஏற்படும் மாறுதல்களும் சிறப்பாகத் தேவரால் பாடப்பட்டுள்ளன. கார் காலத்தில் மழைத்துளி விழுந்ததும் பூத்துக் குலுங்கும் முல்லை மலரும், பனிக் காற்றுப் பட்டுக் கருகும் தாமரை மலரும், சாய்ந்து கிடக்கும் செந்நெல்லும் நம் கண்முன் தோன்றும் வகையில் தேவர் பாடியுள்ளார்.

சிந்தாமணியைப படித்துவிட்டு மூடும்போது, தனி உலகத்தில் பல ஆண்டுகள் தங்கி வாழ்ந்த இன்பத்தைப் பெறுகின்றோம். ஒரு பெரிய நாட்டிற்குச் சென்று, அங்குள்ள பல இடங்களைக் கண்டு களித்து,பல பொருள்களை நுகர்ந்து,பலவேறு மக்களைக்கண்டு அவர்க ளோடு அளவளாவி மகிழ்ந்தது போன்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம்.

பாவிய மாந்தர்: சிந்தாமணிக் கதையை நாடகமாக எழுதி மேடையில் நடிக்க ஏற்பாடு செய்ய நூற்றுக்கு மேற்பட்ட நடிகர்கள் வேண்டும். மேலும் அமைச்சர் போர், மறவர், அந்தணர், முனிவர், தோழர், தோழியர், நகர மக்கள் – ஆகியவர்களாக நடிக்கக் கூட்டம் கூட்டமாக மக்கள் வேண்டும். கதையில் இவ்வளவு பேர் இடம் பெற்றாலும் சிலரே நம் நெஞ்சத்தில் நீங்காமல் இடம் பெறுகின்றனர். சிலரே கதை முழுவதிலும் தோன்றுகின்றனர்; விரல் விட்டு எண்ணக் கூடியவரின் பண்புகளே நம்மைக் கவர்கின்றன.

பெயர்ப் பொருத்தம்: பாவிய மாந்தரின் வட மொழிப் பெயர் களைத் தமிழ் ஒலி முறைக் கேற்ப மாற்றி அமைத்துக் கொண்ட தேவர், குறிப்பிடத்தக்க சில நல்ல மாறுதல்களையும் செய்துள்ளார். நந்தகோன் மகன் 'கோதாவரி'யைக் 'கோவிந்தை'யாக்கியுள்ளார். மூலக் கதையிலுள்ள குணமாலையைச் சுரமஞ்சரியாகவும், சுரமஞ் சரியைக் குணமாலையாகவும் மாற்றியிருக்கின்றார். அவ்விரு பெண் களின் பண்பையும் நோக்கிக் 'குணமாலை' – என்ற பெயரை நல்ல பண்புடைய நங்கைக்குச் சூட்டியிருக்கின்றார். பெயரின் வாயி லாகவே கதை மாந்தரின் பண்பைக் குறிப்பால் ஆசிரியர் விளக்குவ துண்டு. குணமாலை என்ற பெயரை நற் பண்புடைய நங்கைக்குச் சூட்டிய அவரே கட்டியங்காரன் மக்கள் இருவர்க்குக் காமுகன், கோமுகன் – என்ற பெயர்களைச் சூட்டியிருக்கின்றார்.

பாவியத் தலைவன்: சீவகன் பாவியத் தலைவன். அவனைத் தன்னிகரில்லாத் தலைவனாகத் தேவர் படைத்துள்ளார்.

அருள்வலி ஆண்மை கல்வி
அழகு அறிவு இளமை ஊக்கம்
திருமலி ஈகை போகம்
திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவர் இவ் உலகில் யாரே
சீவகன் ஒக்கும் நீரார்? (1165)

பயங்கெழு பனுவல் நுண்ணூல்
நடையுளார் சொல்லிற் றெல்லாம்
நம்பி சீவகன் கண் கண்டாம் (464)

என்ற பல விடங்களில் சீவகன் புகழப் படுகின்றான். இசைக்கலையில் பெண்ணை வெற்றி கொள்வது ஓர் ஆண்மகனுக்குச் சிறப்பில்லை என்று கருதிய தேவர், மிக நயமாகச் சீவகனின் வெற்றியைப் புலப்படுத்தியுள்ளார். "மாதர் இசை தோற்று இருந்தனளே" (735) என்று காந்தருவ தத்தையின் தோல்வியைக் கூறுகின்றார். தன்னிகரில்லாத் தலைவர் பெண்ணை வெல்வது சிறப்பில்லை என்று தேவர் கருதினார்போலும்!

சீவகனைத் தேவர் எல்லாப் பண்புகளும் நிரம்பிய பண்பாளனாய் –பல்கலையும் வல்ல கலைஞனாய்–அறமும் அன்பும் வாய்ந்த நல்லவனாய் –ஆண்மையும் மறமும் உள்ள வீரனாய் -அறிவும் ஒழுக்கமும் வளர்ந்த சான்றோனாய்– கொடியவரை எதிர்த்து அழித்து நல்லவரைக் காக்கும் காவலனாய் – தோற்றப் பொலிவு மிக்க காளையாய்க் காட்டுகின்றார். சீவகன் அடையாத இன்பங்கள் இல்லை; செய்யாத அருஞ் செயல்கள் இல்லை; பெறாத நற்பேறுகள் இல்லை; அவன் கடமை தவறாத மைந்தன்; பழகுவதற்கு இனிய நண்பன்; காதல் மிகுந்த கணவன்; குறிப்பறிந்து நடக்கும் மாணவன்; இடுக்கண் களையும் தோழன்; நன்மை செய்யும் மன்னன்.

சீவகன் தாழ்ந்த நிலையில் பிறந்து, படிப்படியாய் அறிவு ஆற்றல்களால் உயர்ந்து விளங்குகின்றான். சுடுகாட்டில் யாருமற்ற நிலையில் பிறந்து, குடிமகன் ஒருவன் வீட்டில் வளர்ந்து, பின் எல்லா நலங்களும் பெற்றுச் சிறப்படைகின்றான். இனிய பண்புகளாலும் விடா முயற்சியாலும் ஆற்றலாலும் முன்னேறுகின்றான். அவன் எல்லாருக்கும் நன்மை செய்கின்றான். மக்களுக்கேயன்றி விலங்குகளுக்கும் நன்மை செய்கின்றான். அவனிடம் எல்லாரும் விரும்பத்தக்க பல பண்புகள் உள்ளன.

சிறு அகவையில் சீவகனைக் கண்டதும் ஆசிரியர் அச்சணந்தியின் 'யானைத்தீ'– என்னும் தீராப்பசி நீங்குகின்றது. காளையாய் அவன் வளர்ந்தபின் வேடர் கவர்ந்து சென்ற ஆனிரையை மீட்டு இடையர்க்கு நன்மை செய்கின்றான்; வேடரைக் கொல்லாமலே நிரையை மீட்கிறான்; யானையிடம் அகப்பட்டுக்கொண்ட குணமாலையைக் காக்கிறான்; அடிபட்டுக்கிடந்த நாயின் காதில் மறைமொழி

ஓதி உய்விக்கிறான்; காட்டுத்தீயில் அகப்பட்ட யானைகளைக் காக்கின்றான்; பாம்பு கடித்து மயங்கிக் கிடந்த பதுமையைக் காக்கின்றான். சித்திரகூடத்து முனிவருக்கு அறிவுரை கூறுகின்றான்; வழிப்போக்கன் ஒருவனுக்கு அணிகலன் தந்து அறநெறி உணர்த்துகிறான். தான் அரசு ஏற்றதும் நன்றி மறவாமல், தனக்கு உதவியவர்க்கெல்லாம் நன்மை செய்கின்றான்.

சீவகன் அறிந்த கலைகள் பல உண்டு. அவன் அக் கலைகளில் சிறந்து ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்குகின்றான். யாழ் இசைத்தல், எந்திரப் பன்றி எய்தல், பாம்பின் நஞ்சு நீக்குதல், சுண்ணப் பொடி ஆராய்தல் – போன்ற கலைகளில் வல்லவர் யாரும் எய்தாத பெருவெற்றி எய்துகின்றான். மூன்று முறை நடந்த போர்களில் அவன் கலந்து கொண்டு வேடரை வெல்கிறான்; பிற மன்னர்களை வெல்கின்றான்; கட்டியங்காரனைக் கொல்லுகின்றான். தன் வலிமையாலும் ஆற்றலாலும் முயன்று பெற்ற நாட்டிற்குத் தலைவனாக முடிசூடுகின்றான். சீவகன் பல பெண்களை மணப்பதற்கு அவன் கற்ற கலைகளே துணைசெய்தன. இவ்வாறு எல்லா வகையிலும் சீவகன் தன்னிகரில்லாத் தலைவனாகப் பொலிகின்றான்.

பிறர்: கொடுமையே உருவானவன் கட்டியங்காரன். அவனிடமும் இரண்டொரு நற்பண்பு இருப்பதாக தேவர் குறிப்பிடுகிறார். அவன் வஞ்சினம் கூறும்போது, "இல்லாளை அஞ்சி விருந்தின் முகங்கொன்ற நெஞ்சிற் புல்லாளன் ஆக, மறந்தோற்பின்;" என்று கூறுகிறான். இருண்டவானத்தில் தோன்றும் மின்னலைப் போல, கொடியவன் உள்ளத்திலிருந்து நல்ல நினைப்பு ஒன்று வெளிப்படுகிறது. கொடியவர்களிடமும் சில நற்பண்புகள் உண்டு என்பதை தேவர் நன்கு உணர்ந்துள்ளார்.

குணமாலையும் சுரமஞ்சரியும் ஒப்பிட்டு நோக்கி மகிழவேண்டிய படைப்புகள். இருவேறு பண்புடைய பெண்களைத் தேவர் எவ்வளவு சிறப்பாகப் படைத்துள்ளார் என்பது அப்போது விளங்கும். காந்தருவதத்தை தன் கணவனுக்கு இடுக்கண் வந்தபோது தன்னால் தன் கணவன் காக்கப்படின் கணவன் புகழுக்கு மாசு வரும் என்று அஞ்சிக் கலங்குகின்றாள். சீவகனும் தன் மனைவியால் காக்கப்படுவதை விரும்பவில்லை; இவர்களிடமன்றோ ஒத்த உள்ளம் காணப்படுகின்றது! இவர்கள் அல்லரோ கருத்தொருமித்த காதலர்; விசயை தன் மகன் மீது கொண்டுள்ள அன்பு தாயன்புக்கு ஓர் எல்லையாக விளங்குகின்றது. 0

இறைமைக் காட்சி!

மெய்ம்மைப்பித்தன்—

பல்லாயிரங்கோடி சிற்றுயிர்கள் உலவுவது உலகம்!
பல்லாயிரங்கோடி குற்றுயிர்கள் உலவுவது உடலம்!

நிலத்தோடொட்டியும், நிமிர்ந்தும்
நிற்பனவாகிய நிலைத்திணைகளும்,
நெளிவனவாகிய புழுவினமும்,
நீந்துவனவாகிய மீனினமும்,
பறப்பனவாகிய புள்ளினமும்,
நகர்வனவாகிய விலங்கினமும்,
நடப்பனவாகிய மாந்தவினமும்,
—ஆகிய உயிர்கள் வதியும் பரந்த 'உடல்' உலகம்!

படிந்தும், குத்திட்டும் நிற்பதாகிய மயிர்த்திரட்சியும்,
நெளிவனவாகிய குடல், மலப் புழுக்களும்,
நீந்துவனவாகிய வெள்ளை, சிவப்பு எனும் குருதி வடிகங்களும்,
பறப்பனவாகிய நோயுயிரி, நுண்ணுயிரிகளும்,
நகர்வனவாகிய ஈரினமும், பேனினமும்
—ஆகிய உயிர்கள் நொதியும் சிறிய 'உலகம்' உடலம்!

உலகில் மாந்த உயிர்கள் பலவுண்டு!
உடலில் மாந்த உயிர் ஒன்றே உண்டு!

உலகத்துள், கல் மலைகள், நீராறுகள்,
உவர்க்கடல்கள், ஊழ்க்கும் பள்ளத்தாக்குகள்,
மரக்காடுகள் உண்டு!

உடலுள்ளும், தசைமலைகள், நாள ஆறுகள்,
குருதிக் கடல்கள்,
கருக்குழி, எருக்குழி போலும் பள்ளத்தாக்குகள்,
மயிர்க் காடுகள் உண்டு.

உலகம் பூத வண்டம்!
உடலம் புலனண்டம்!

உலகை இயக்குவது இறைமை!
உடலை இயக்குவது உயிர்மை!

பூதவண்டத்திற்குத் தலைமை பூணுவோன் இறைவன்!
பொறியண்டத்திற்குத் தலைமை பூணுவோன் புலம்பன் (உயிர்)!

மாந்தன் தனக்குக் காரணமான இறைமையைக் காணத்துடித்தான்!
மலப்புழுவோ, குருதிவடிகமோ, ஒரு பேனோ தனக்குக் காரணமான
உயிர்மையைக் காணத் துடித்தது!

மாந்தன் பாறைகளை உடைத்தான்;
மணலைத் தோண்டினான்; மண்டிக்கிடந்த காடுகளை அலசினான்!
கடலைத் துழாவினான்; மலையைக் குடைந்தான்;
முழைஞ்சுகளின் உட்புகுந்து கூவி அழைத்தான்!
வானில் அளாவினான்; விசும்பிடை உலா வந்தான்;
—உலக முழுவதிலும் தேடினான்!

ஆனால், அவன் காண விரும்பிய இறைவனை,-
பேரண்ட மூலவனை -
தன்னையும் தன்னைச் சார்ந்த சிற்றுயிர்களையும்,
சிற்றுயிர் வாழ் உலகையும்,
உலகைச் சேர்ந்த பேரண்டங்களையும்,
இயக்கி வரும் தலைவனைக்—
காணவும், கண்டு போற்றவும்,
இயலாதவனாய் மனங்கசிந்து நின்றான்!

மலப்புழுவோ,
மலத்திரளை முழுவதும் குடைந்தது;
பெருங் குடலில் தேடியது;
சிறுகுடலின் உள்ஓரத்துச் சுவரிதழ்களில் எல்லாம்
நுழைந்து பார்த்தது!
இரைப்பையுட் சென்று வட்டமிட்டது!
மீண்டும் கீழ்நோக்கி யிறங்கி,
எருக்குழியிலும் கருக்குழியிலும் அலைந்து தேடியது!
வெளியில் வந்து, தொடைச் சந்துகளைக் குடைந்தது;
கொப்பூழில் துழாவியது;
மார்புக் குவட்டின் மேலேறிக் கொடுமுடி வரை சென்றது;
அக்குளின் உட்புகுந்தது;
மூக்குத்துளை, செவித்துளைகளின் உட்சென்று,
நெருடிப் பார்த்தது;

கட்குழி, புருவ அடர்த்தி, நெற்றி மடிப்பு, காது மடக்கு
எங்கணும் விடாமல் புகுந்து தேடியது;
தலையின் கொத்து முடிகளை அலசி ஆராய்ந்தது!

ஆனால் அது காண விரும்பிய புலம்பனை,
தான் உள்ளடங்கி உயிர்க்கும் உயிரை,
தன்னைச் சார்ந்த குற்றுயிர்களையும், குற்றுயிர் வாழ் குச்சில்களையும்
இயக்கி வரும் தலைவனைக்—
காணவும், கண்டு போற்றவும்,
இயலாததாய் மனங்கசிந்து நின்றது!

மாந்தன், இறைவனைத் தேடியலுத்த எரிச்சலில், 'இறைவன்' என்ற
ஓருருவமோ, ஓராற்றலோ, ஒன்றே 'இல்லை' யென்று
கூக்குரலிட்டான்!

மலப்புழு, புலம்பனை, ஆதனை, உயிரைத் தேடியலுத்த
எரிச்சலில், 'புலம்பன்' என்ற, ஓருருவமோ, ஓராற்றலோ,
ஒன்றே 'இல்லை' யென்று
கூக்குரலிட்டது!

மாந்தன் இறந்தான்!
மண்ணொடு மண்ணாய் மட்கிப் புழுவானான்!

மலப்புழு இறந்தது!
மலத்தொடு மலமாய் மட்கி மண்ணானது!

இறைவனின் இயக்கம் முன்போல் நடந்து கொண்டிருந்தது!
புலம்பனின் இயக்கமும் முன்போல் நடந்துகொண்டிருந்தது!

நினைவில் வையுங்கள்

தனித்தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடு
இன்றே உறுப்பினராகுங்கள்

பூஞ்சோலை

ஆசிரியர்: காரை-இறையடியான், காரை-அழகன்

ஆண்டுக் கட்டணம் 5 உருபா. தனிஇதழ் விலை 40 காசு.

பூஞ்சோலை, காரைக்கால்-1.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

மெய்வாழ்க்கை

—தமிழவேள்

நம் உடம்பில் அமைந்திருக்கும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களும் இந்த ஐம்பூதங்களை அறிவதற்கென்று அமைந்தவையாகும். உலகத்திலுள்ள எந்தப் பொருளும் இந்த ஐம்புலன்களால் அறியக்கூடியவையாக இருக்கும். நாம் உடலால் தொட்டு அறிகிறோம் என்றால் அது காற்றால்தான். நாம் நாவால் சுவைத்து அறிகிறோம் என்றால் அது நீரால் தான். நாம் கண்ணால் பார்த்து அறிகிறோம் என்றால் அது ஒளி தரும் நெருப்பால் தான். நாம் மூக்கால் முகர்ந்து அறிகிறோம் என்றால் அது நிலமாகிய மண்ணால்தான். நாம் காதால் கேட்டு அறிகிறோம் என்றால் அது வெளியால் தான். இந்த ஐம்புலன்களாலும் ஐம்பெரும் பூதங்களால் ஆகிய உலகை நாம் அறிவது நம் உடலில் உயிர் இருக்கும் வரையில் தான். உயிர் போய்விட்டால் உடலில் இருக்கும் கண் பார்ப்பதில்லை. காது கேட்பதில்லை. மூக்கு மூகர்வதில்லை. நாக்கு சுவைப்பதில்லை. கை கால்கள் முதலான உறுப்புகள் எதையும் தொடுவதில்லை. உயிர் பிரிந்த உடனே உடல் அழிந்து விடுகிறது. தான் தோன்றுவதற்கு அடிப்படையாக இருந்த ஐம்பெரும் பூதங்களோடே சென்று கலந்து விடுகிறது. உயிர் போய்விட்டால் குருதி உறைந்து நீர்த்தன்மை போய் விடுகிறது. உடற்சூடு மாறி நெருப்புத்தன்மை போய்விடுகிறது. மூச்சு விடுகின்ற காற்றும் போய் விடுகிறது. எலும்பும் தோலும் எரிக்கப்பட்டுச் சாம்பலாகியோ அல்லது புதைக்கப்பட்டு மட்கி மண்ணாகியோ—மண்ணோடு மண்ணாகி விடுகிறது. உடம்பில் இருந்த வெளியும் உடம்பு அடைத்துக் கொண்டிருந்த வெளியும் காலியாகி வெளியோடு வெளியாகி விடுகிறது.

இவ்வாறு அழிந்து போகக் கூடிய உடம்போடு சேர்ந்து வாழவே உயிர் பிறவி எடுத்து வருகிறது. ஊனால் ஆகிய உடம்பையே தனக்கு இருப்பிடமாகக் கொண்டு வாழ்கிறது.

"ஊனைக் குறித்த உயிரெல்லாம்" (குறள்: 1013)

உயிர் இந்த உலகில் வாழ்வதற்கென்றே உடலை எடுத்து வருவதால் அந்த உடலின் மீது உயிருக்கு ஒரு பற்றுதல் இருக்கிறது; விருப்

பம் இருக்கிறது; காதல் இருக்கிறது. உயிர் உடம்பை விட்டுத் தானகப் பிரிவதில்லை. உடம்புக்குக் கேடு நேர்கின்ற பொழுதுதான் பிரிகின்றது. உடம்புக்குக் கேடு வரவில்லையென்ருல் உயிர் உடம்பை விட்டுப் பிரியவே பிரியாது. உடம்போடு உயிர் அவ்வளவு பற்றுடையது. அதனுல் தான் ஒரு தலைவன் தன் காதலியோடு தனக்குள்ள தொடர்பைப் பற்றிக் கூற வருகின்ற பொழுது 'உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பைப் போன்றதுதான் எனக்கும் என் தலைவிக்கும் இடையே இருக்கும் தொடர்பு' என்கிருன்.

> **"உடம்பொடு உயிரிடை என்ன மற்றன்ன**
> **மடந்தையொடு எம்மிடை நட்பு"** —குறள்: 1122

'உடல் இன்றி உயிருக்கு வாழ்க்கை இல்லை. உயிர் இன்றி உடலுக்கு இயக்கமில்லை. உடலும் உயிரும் ஒன்ருக இருந்தால்தான் வாழ்க்கை. அப்படித்தான் நான் இன்றி அவளுக்கு வாழ்க்கையில்லை. அவள் இன்றி எனக்கும் வாழ்க்கை இல்லை'—என்கிருன் அத்தலைவன்.

உடலோடு கூடி வாழ்கின்ற உயிர் எவ்வளவு துன்பப்பட நேர்ந்தாலும் உடலோடு இருந்து வாழும் வாழ்க்கையையே விரும்புகிறது. உடலை விட்டுச் செல்ல விரும்புவதில்லை. இதனைத் திருவள்ளுவர் 'சூது' என்னும் அதிகாரத்தில் வரும் ஒரு குறட்பாவில் அழகாகக் கூறுகிருர்.

> **"இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்**
> **உழத்தொறூஉம் காதற்று உயிர்"** —குறள்: 940

'பணயம் வைத்து ஆடுகின்ற பொருளை இழக்குந்தோறும் சூதாடுவோனின் மனம் சூதின்மேல் பெருவிருப்பம் கொள்கிறது'— என்கிருர்.

உயிர் அழிவற்றது என்ருலும் உயிருக்கு வாழ்வும் இருக்கிறது. சாவும் இருக்கிறது. வாழ்வு என்பது உடம்போடு சேர்ந்து இருப்பது. சாவு என்பது பிரிந்திருப்பது. தன் தலைவியோடு சேர்ந்திருப்பது உயிருக்கு வாழ்வைப் போல் இருக்கிறது என்கின்ற தலைவன் தன் தலைவியை விட்டுப் பிரிந்திருப்பது உயிருக்குச் சாவைப் போல் இருக்கிறது என்கிருன்.

"வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து —குறள்: 1124

உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்பு கூட்டுக்கும் பறவைக்கும் உள்ள நட்பைப் போன்றதுதான். கூட்டில் இருக்கின்ற வரையில் இருந்துவிட்டுப் பறந்து செல்கின்ற பறவையைப் போலத்தான் உயிர் உடம்பில் சில காலம் இருந்துவிட்டுப் பிரிந்து போய்விடுகிறது. உயிர் உடம்பை விட்டுப் பிரிந்து செல்வது நாம் கண்மூடி உறங்குவதைப் போன்றது என்ருல், மீண்டும் அந்த உயிர் வேருேர் உடம்பில் புகுந்து பிறப்பது, உறங்கியிருந்து விட்டு கண் விழிப்பது போன்றதே. அதாவது உயிருக்குப் பிறப்பும் இறப்பும் மாறி மாறி வந்து கொண்டே இருக்கின்றன.

"குடம்பைத் தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு —குறள்: 338

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" —குறள்: 339

இவ்வாறு உயிருக்குப் பிறப்பும் இறப்பும் –அஃதாவது உட–லோடு சேர்ந்து வாழ்தலும் பிரிதலும் நிகழ்ந்து கொண்டே இருப்–பானேன்? உயிர் ஆணவம் உடையது. 'தான்' என்னும் செருக்கு உடையது. கடல் நீரில் உப்பு இருப்பதைப் போல், நெல்லில் உமி இருப்பதைப் போல் உயிரோடு ஆணவம் பொருந்தியிருக்கிறது. உயிரை விட்டு இந்த ஆணவம் நீங்கவேண்டும் என்பதற்காகவே இறைவன் உயிருக்கு இந்த உலக வாழ்க்கையை– உடம்போடு பிறத்தலைத் தருகிருன். உலகில் பிறந்து வாழ்ந்து இறப்பதால் உயிரோடு இருக்கும் ஆணவம் எப்படிப்போகும்?

ஆடையிலுள்ள அழுக்கைப் போக்க, சலவைத் தொழிலாளி என்ன செய்கிருர்? அழுக்கேறிய ஆடையோடு உவர் மண்ணைச் சேர்க்கிருர். ஏற்கனவே ஆடையில் இருக்கும் அழுக்கோடு மண்ணுகிய வேருேர் அழுக்கும் அன்ருே சேர்கிறது! அப்படிச் சேர்ந்தாலும் பின்னர் அந்த ஆடையைத் துவைத்து நன்ருக நீரில் அலசுகின்றபோது அதனேடு சேர்க்கப்பட்ட உவர்மண்ணும் ஆடையை விட்டுப் போய் விடுகிறது. ஆடை அழுக்கு நீங்கித்

தூய்மை பெறுகிறது. வெண்ணிறமடைகிறது. அது போன்றே உயிர் இந்த உலகில் உடம்போடு இறைவனால் சேர்க்கப்படுவது. உயிரிலுள்ள ஆணவமாகிய அழுக்கு – செருக்காகிய அழுக்கு நீங்க வேண்டும் என்பதற்காகவேயாம். உடம்போடு சேர்ந்து பிறக்கின்ற உயிர் நல்வினைகளை ஆற்றி, ஒழுக்கத்தோடு வாழ வேண்டிய முறைப்படி வாழ்ந்து, மெய்ப்பொருளை அறிந்து மெய்யுணர்வு பெற்று 'தான்' என்னும் செருக்கைப் போக்கவில்லையென்றால், அது மீண்டும் மீண்டும் உலகில் உடம்போடு பிறக்க நேர்கிறது.

உயிரைப் பற்றியிருக்கும் ஆணவம் எப்போது அகலும்? எல்லா உயிர்களிடமும் அருள் உடையவர்களாக, எந்த உயிருக்கும் இன்னா செய்யாதவர்களாக, கொலையும் புலையும் தவிர்த்து, பொய் பேசாமல், களவு செய்யாமல், சினம் கொள்ளாமல், உலகம் நிலையாமையை அறிந்து, தவம் மேற்கொண்டு, நெஞ்சத் துறவு பூண்டு, பற்றற்று வாழ முயல்கின்ற பொழுது தான் உயிரைப் பற்றியுள்ள ஆணவம் அழியும்.

உயிர் உலகத்தைப் பற்றியே வாழ்ந்து வரும் இயல்புடையது. எனவே உலகப்பற்றை விடவேண்டும் என்றால் அது பற்றற்ற இறைவனிடம் பற்றுக் கொள்ள வேண்டும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"— [குறள்: 350]

பற்றற்ற இறைவனிடம் பற்றுக் கொண்டால் தான் உயிருக்கு இயல்பாக உள்ள அவா–ஆசை–நீங்கும். அவா நீங்கினால்தான் பிறப்பறுக்க முடியும். உயிர் மீண்டும் உடம்போடு சேர்ந்து பிறவாமல் இருக்க முடியும். மாந்தப் பிறவி எடுத்திருக்கும் உயிர் ஏதாவது ஒன்றை விரும்புவதானால் அது மீண்டும் பிறவாத நிலையைத்தான் விரும்ப வேண்டும். மாந்தப் பிறவியின் நோக்கமே உயிர் மீண்டும் பிறவா நிலையை எய்த வேண்டும் என்பதுதான். மீண்டும் பிறவாத நிலை எப்போது கிடைக்குமென்றால் அவா அற்றால்தான் கிடைக்கும். அவாவின்மையை முதலில் விரும்பி மேற்கொண்டு ஒழுகினால் தான் அது பிறவாத நிலையைத் தருவதாக அமையும்.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்" —குறள்: 362

என்றுமே நிரம்பாத இயல்புடைய ஆசையை நீக்கி விட்டால் நீக்கிய உடனே மாருத பெருநிலையை அது தரும். அலைவு இல்லாத -துன்பமில்லாத-பிறப்பு இறப்பு இல்லாத பெருநிலையை அது நல்கும்.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்" —குறள்: 370

உயிர் அந்தப் பெருநிலையை அடைய உடம்போடு சேர்ந்து வாழ்ந்தே தீரவேண்டும். உயிர் வாழ்க்கைக்கு அடிப்படையாக உடம்பு இருப்பதால் நாம் உடம்பையும் பாதுகாக்க வேண்டும். உடம்பைப் பாதுகாத்தால் தான், உயிர் அதனோடு இருந்து வாழ முடியும். உயிர் உடம்போடிருந்து வாழ்ந்தால்தான் அதற்கு மெய்யுணர்வு ஏற்பட முடியும்.

உடம்பைப் பாதுகாத்தல்தான் உயிர்வாழ்க்கைக்கு முதல் நிலையாகும். ஆனால் உயிர் வாழ்க்கை என்பது அந்த முதல் நிலையிலேயே நின்றுவிடக் கூடாது. இரண்டாவது நிலையாகிய உள்ளத்-தைப் பாதுகாத்தல் அல்லது உள்ளத்தைப் பண்படுத்தல் என்னும் நிலைக்கும் செல்லவேண்டும். உள்ளம் பண்படுகின்ற நிலைதான் உண்மையை உணர்கின்ற நிலை; மெய்யுணர்வு பெறுகின்ற நிலை; அந்த மெய்யுணர்வு பெற்று உய்வதற்கென்றே உயிர் உடம்போடு சேர்ந்து இந்த உலகில் வந்து வாழ்கிறது. உயிர் வாழ்க்கையின் நோக்கமே மெய்யுணர்வு பெறுதல்தான். எனவே மெய்யுணர்வு பெறுகின்ற வகையில் வாழ்கின்ற வாழ்க்கையே மெய்வாழ்க்கையாகும். 0

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ்ச் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்

	உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம் உருபா	3-00	6-00	4-00
தனியிதழ் ”	0-25	0-50	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

செய்து வாய்பாட்டு வினைகள்

இரா. கோதண்டராமன், க. மு: (தமிழ்) க. மு: (மொழியியல்)
மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

(குறிப்புரை:- செய்து வாய்பாட்டு வினைகள் என்னும் இக் கட்டுரையில், செய்து வாய்பாட்டு வினைகளின் அமைப்பு ஒரு புதிய கோணத்தில் ஆராயப்பெற்றிருக்கிறது. இன்றளவும் செய்து வாய்பாட்டு வினைகளில் உள்ள தகரம் காலக்கிளவியாகவே கொள்ளப் பெற்று வருகிறது. தகரத்தை அங்ஙனம் கொள்வது வரலாற்று நிலையில் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்றுகளாகப் பழந்தமிழில் விளங்கும் ஊர்த்து [ஊரையுடையது], மலைத்து (மலையையுடையது) போன்ற வழக்குகளிலும் தகரம் பயின்று வழங்குகின்றது. வரலாற்று நிலையில் செய்து வாய்பாட்டு வினைகளில் காணப்படும் தகரமும், ஒன்றன்பால் குறிப்பு வினைமுற்றுகளில் காணப்படும் தகரமும் ஒன்றே; அவற்றை வெவ்வேறாகக் கொள்வதற்கில்லை. இக்கட்டுரையில் செய்து வாய்பாட்டு வினைகளில் உள்ள துகரக்கிளவி வினைமுற்று விகுதியாகக் கொள்ளப் பெறுகிறது. தன்மை ஒருமை மற்றும் படர்க்கை ஒருமை வினை முற்று விகுதிகளைக் குறிக்கும் துகரக்கிளவியையும் ஒரு வினைமுற்று விகுதியாகவே குறித்துச் செல்கிறார் தொல்காப்பியர்.

செய்து வாய்பாட்டு வினைகள் இரண்டு காலப் பொருண்மையின என்பதும், அவற்றில் நிகழ்ந்த காலக்கிளவிகள் எங்ஙனம் மறைந்தொழிந்தன என்பதும் இக்கட்டுரையில் ஆராயப்பெற்றுள்ளன.

தமிழில் காணப்படும் பெரும்பான்மையான வினையடிகள் வரலாற்று நிலையில் வினை முற்றுகளாக வழங்கியவையாகும். இவ்வுண்மையை இதுகாறும் திராவிட மொழிநூலார் உணர்ந்ததாகவும் தெரியவில்லை; உணர்த்தியதாகவும் தெரியவில்லை. அத்தகைய வினையடிகளின் உள்ளமைப்பை ஆராய்வதற்கு முன்னோடியாகவும் இக்கட்டுரை வரையப் பெற்றுள்ளது.)

தமிழில் செய்து வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றிய செய்தால் வாய்பாட்டு வினைகள் கட்டளைப் பொருண்மையை உணர்த்துவனவாகும். செய்து வாய்பாட்டு வினைகள் பொதுவாக

இறந்த காலப் பொருண்மையை உணர்த்துவனவாகக் கருதப்பெறும். இத்தகைய வினைகளை நிலைக்களனாகக் கொண்டு நிகழும் செய்தால் வாய்பாட்டு வினைகள் அமைந்த தொடரன்கள் இறந்த கால வினை முற்றைப் பயனிலையாகக் கொள்ளாமல், ஏனைய கால வினைமுற்றுக ளையே பயனிலையாகக் கொண்டு முடிகின்றன. இதனால் செய்தால் வாய்பாட்டு வினைகளுக்கும் பயனிலையாக நிகழும் வினைமுற்று களுக்கும் இடையில் கால இயைபு (Temporal Agreement) இல் லாமல் போகிறது. கீழ்வரும் தொடரன்களை நோக்குக.

1. மணியன் கண்ணன் வந்தால் படிப்பான்.
2. மணியன் கண்ணன் வந்தால் படிக்கிறான்.
3. *மணியன் கண்ணன் வந்தால் படித்தான்

இவ் வெடுத்துக்காட்டுகளில் மூன்றும் தொடரன் வழக்கில் பொருந்தி நிகழ்வதன்று. முதல் இரண்டு தொடரன்களிலும் பயனிலை எதிர்வு மற்றும் நிகழ்வுப் பொருண்மையைஉணர்த்தும் வினைமுற்றுக ளாக நடைபெறுவதால் அவை வழக்கில் கொள்ளத் தக்கனவா கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு நோக்கும்போது கட்டளை வினை அமைவதற்கு ஏதுவாகிய செய்து வாய்பாட்டு வினைகளை உண்மையிலேயே இறந்தகாலப் பொருண்மையை உணர்த்துவன வாகக் கொள்வதற்கில்லை. ஆனால் மணியன் வந்து போனான் என்ற தொடரனில் அமைந்த செய்து வாய்பாட்டு வினையாகிய வந்து என்னும் வினையெச்சம் இறந்தகாலப் பொருண்மையைத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றது. இதனின்றும் ஓர் உண்மை பெறப்படும். இறந்தகாலப் பொருண்மையை உணர்த்தும் செய்து வாய்பாட்டு வினைகளும், கட்டளை வினைகளின் பகுதி (Base) யாக விளங்கும் செய்து வாய்பாட்டு வினைகளும் ஒரே வடிவினவாயினும் அமைப்பில் வேறுபட்டனவாதல் வேண்டும். இவ்வாறு கொண்டாலன்றி எதிர் அல்லது நிகழ்வுப் பொருண்மையை உணர்த்தும் வினை முற்றுகள் கட்டளை வினைகளைத் தொடர்ந்து பயனிலையாக அமைவ தற்குரிய காரணத்தை யாப்புற விளக்க முடியாது. ஓர் அமைப் பினவாக நின்று முரண்பட்ட காலப் பொருண்மைகளை உணர்த்திச் செல்லும் செய்து வாய்பாட்டு வினைகளின் அமைப்பைச் சுருக்க மாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இறந்த காலப் பொருண்மையை உணர்ந்தும் செய்து வாய்பாட்டு வினைகள் *செய் + இய் + து எனவும் *செய் + இம் + து எனவும் பொது அமைப்பினைக் கொண்டனவாகும். இவ்வமைப்பில் துகரக் கிளவி வினைமுற்று விகுதியாகும். இய், இம் ஆகிய இரு இடைச் சொற்களும் இறந்தகாலப் பொருண்மையை உணர்த்துவனவாகும். இவற்றுள் இய் என்னும் காலக்கிளவி ஈய் (> ஈ) என்னும் வினையின் உயிர்முதல் குறுகிய வடிவமாகும். தெலுங்கில் இய் (> இய்யு) தனி வினையடியாகவே நிகழ்கின்றது. இவ்வினையே வரலாற்று நிலை வினையடிகளின்கண் துணைவினையாக நின்று இறந்தகாலப்பொருண்மையை உணர்த்திச் செல்கின்றது. பழந்தமிழில் ஈ (> ஈய்) என்னும் வினையும் ஈற்றுமெய் கெட்டு வினையடிகளைச் சார்ந்து நின்று இப்பொருண்மையைக் குறிக்கின்றன.[1] [எ-டு] தரீஇ 'தந்து' கொளீஇ 'கொளுத்தி'.

செய் + இம் + து என்ற பொது அமைப்பில் காணப்படும் இம் என்னும் காலக்கிளவியை வரலாற்று நிலையில் ஏவற் பொருண்மையை உணர்த்தும் செய்யும் வாய்பாட்டு வினையாகக் கருதலாம். செய்யும் வாய்பாட்டு வினைகள் ஈற்றுமிசை உகரம் கெட்டு செய்ம் வாய்பாட்டு வடிவினவாகக் குறுகி நிற்றல் உண்டு. [எ-டு] காணும் > காண்ம்; தின்னும் தின்ம். இதனை அடிப்படையாகக்

1. வினையடிகளுடன் துணை வினைகள் நேரடியாகப் பொருந்தி நிற்பனவல்ல என்று கருதுபவர் சிலர். [P. S. Subramanyam, -Dravidian Verb Morphology page 10] புகுதரு, திரிதரு முதலிய வினைகளில் துணைவினைகள் வினையடிகளோடு நேரடியாகப் பொருந்தும் நிலை தமிழில் காணப்படுகின்றது. மேலும் துணைவினைகள் வினையடிகளோடு நேரடியாகப் பொருந்தா என்ற முறையும் இல்லை. மூலமொழியில் துணைவினைகள் வினையடிகளின்கண் பொருந்தி நின்று காலப் பொருண்மையை உணர்த்தினவாதல் வேண்டும். இய், ஈய் ஆகிய வினைகள் வினையடிகளுடன் பொருந்தி இறந்த காலப் பொருண்மையை உணர்த்தின என்பதே உண்மை. பின்னர் இத் துணை வினைகளின் ஈற்றில் நின்ற யகரமெய்கெட்டதாதல் வேண்டும். பழந்தமிழில் எச்சவினைகளில் இ, ஈ ஆகிய இரண்டும் இறந்த காலப் பொருண்மையை உணர்த்துகின்றன. இவற்றில் மூல வடிவங்கள் இய், ஈய் என்பனவாகும்.

கொண்டு இம் என்னும் காலக்கிளவியின் தொன்மை வடிவை இயும் [இய்+உம்] என உருவமைக்கலாம். இயும் என்னும் செய்யுள் வாய்ப்பாட்டு வினை ஈற்றுமிசை உகரம் கெட இய்ம் என அமைந்து பின்னர் யகரம் கெட இம் என நின்றதாகத் துணியலாம். இதை அரண் செய்யும் வகையில் பழந்தெலுங்கில் இய் என்னும் வினை இம்மு என அமைந்து ஒருமை ஏவற் பொருண்மையை உணர்த்தி நிற்பவையும் இங்குக் கருத்தில் கொள்ளலாம்.

இய், இய்ம் [<இயும்] ஆகிய இரு காலக்கிளவிகளும், வினைமுற்று விகுதியாகிய துகரக்கிளவியுடன் பொருந்தி முறையே *இய்த்து [இய்-து], *இய்ந்து (இய்ம்-து) வன அமைந்து பின்னர் யகரம் கெட இத்து, இந்து என அமையும். இவ்வாறு அமைந்த இவ் இரு வடிவங்களும் வினையடியுடன் பொருந்தி நிற்கும் போது இகரம் கெட்டு நிற்கும். எ-டு. மடி (<?*மடிய்)+இத்து <*மடியித்து >*மடிய்த்து >மடித்து; வளை+இத்து >*வளையித்து *வளைய்த்து > வளைத்து; காய்+இத்து>*காயித்து > காய்த்து; (மடி-?*மடிய்)+இந்து-*மடியிந்து-*மடிய்ந்து - மடிந்து; வளை+இந்து-*வளையிந்து-*வளைய்ந்து-வளைந்து; ஈய்+இந்து-*ஈயிந்து[2] -*ஈய்ந்து[3]-ஈந்து. புணரியல் நிலையில் நிகழ்ந்த இம் மாற்றங்கள் அனைத்தும் நிகழ்நிலை [Synchronic Level] யில் நேர்ந்தனவாகக் கொள்வதற்கில்லை. மொழியில் இம்மாற்றங்கள் படிப்படியாக நிகழ்ந்தனவாதல் வேண்டும். ஆகவே வண்ணனை இலக்கணங்களால் (Discriptive Grammers) இம்மாற்றங்களை உணர்த்திச் செல்ல இயலாமல் போயிற்று.

---

2. எட்டாம் நூற்றுண்டுத் தமிழ்க் கல்வெட்டொன்றில் பெயரெச்சப் பொருண்மையை உணர்த்தும் ஈயிந்த (-ஈய்ந்து—அ] என்னும் வடிவம் காணப்படுவதாகத் தெரிகிறது. —Historical Grammer of Old Kannada. [பக்கம் 82. அடிக்குறிப்பு] Govind Swamirao Gai, 1946.

3. புறநானூற்றில் ஈய்ந்து என்னும் வடிவம் இருமுறை ஆளப்பெற்றிருக்கிறது. [புறம் 364-7, 317-7]. இதன் அடிப்படையில் ஈ என்னும் வினையடியின் தொன்மை வடிவத்தை ஈய் என இங்குக் கொள்ளப்பட்டிருக்கிறது.

உகர ஈற்று வினையடிகள் வரலாற்று நிலையில் பிந்தியன வாதலால் பின்னர் இத்து, இந்து ஆகிய இரு வடிவங்களும் தொடக்கத்தில் நிகழ்வதற்கு வாய்ப்பில்லை. இவ் வினையடிகளின் பின் நிகழும் இத்து, இந்து இகரத்தை இழந்து நிற்கும் என்று வண்ணனை நிலை [Discriptive Level] யில் ஒரு செயற்கை விதியை அமைத்துக் கொண்டாலன்றி, இவற்றினடியாகப் பிறந்த செய்து வாய்பாட்டு இறந்தகால வினையடிகளை ஆராயமுடியாது. உகரத்தின் பின்னர் நிகழும் இகரம் கெடும் என்னும் விதி இங்கு ஒலியியல் உண்மைக்குப் புறம்பாகத் தோன்றினாலும், வண்ணனை நிலையில் இதற்கு மேல் விளக்கிச் செல்ல வாய்ப்பில்லை. வரலாற்று நிலையில் உகர ஈற்று வினைகள் ஒப்புமையாக்கத்தின் அடிப்படையில் -த்து, -ந்து ஆகியவற்றைத் தம்முடன் பொருத்தி இறந்தகாலப் பொருண்மையை உணர்த்தத் தொடங்கின எனக் கருதலாம்.

தமிழில் செய், பெய், கொய், நெய், எய், டை, தொழு, உழு, அழு, பொரு ஆகிய பத்து வினைகளின் அடியாகப் பிறந்த செய்து வாய்ப்பாட்டு இறந்தகால வினைகளில் -இந்து என்ற வடிவம் மெல்லொலியை இழந்து நிற்கிறது. இவ் வினைகளின் செய்து வாய்பாட்டு வடிவங்கள் தொடக்கத்தில் மெல்லொலியுடன் அமைந்து நடைபெற்றன வாதல் வேண்டும். இதை அரண் செய்யும் வகையில் செய்து, பெய்து ஆகிய இரு வடிவங்களும் பேச்சு வழக்கில் செஞ்சு பெஞ்சு/பேஞ்சு என மெல்லொலியை இழக்காமல நிகழ்வதைக் கருத்தில் கொள்ளலாம். திராவிட மொழிகளை நுணுகி ஆராய்வோர்க்கு, ஒரு நிலையில் வல்லொற்றுகளின் முன் நிகழ்ந்த மெல்லொற்றுகள் வீழ்ந்து பட்ட நிலை தெற்றெனப் புலனாகும். தமிழும் இதற்கு விலக்கில்லை. இந்நிலையை ஏற்க மறுத்து, சிலர் செஞ்சு, பெஞ்சு / பேஞ்சு ஆகிய வடிவங்களில் உள்ள மெல்லொலி ஒப்புமையாக்கத்தின் விளைவாகப் பின்னர்த்தோன்றியது எனக்குறித்துச்செல்வர்.[4] ஒப்பியல் சான்றுகளைக் கொண்டு நோக்கும்போது இவர்தம் கருத்துகளை ஏற்புடையனவாகக் கொள்வதற்கில்லை. மேற்குறித்த பத்து வினைகளின் அடியாகத் தோன்றிய செய்து வாய்பாட்டு

4. Two Problems in PARJI Verb Forms—P. S. Subramanyam; Indian Linguisrics. Vol. 25, 1964.

இறந்தகால வினைகளைப் பின்வருமாறு ஆராயலாம். *செய்ந்து-செய்து; *பெய்ந்து-பெய்து; *கொய்ந்து-கொய்து; *நெய்ந்து-நெய்து; *எய்ந்து–எய்து; *வைந்து-வைது; *தொழுந்து-தொழுது *உழுந்து-உழுது; *அழுந்து-அழுது; பொருந்து-பொருது.

இதுவரை இறந்தகாலப் பொருண்மையை உணர்த்தும் செய்து வாய்பாட்டு வினைகளின் அமைப்பு ஆராயப் பெற்றது. இனி கட்டளை வினைகளின் மிகுதியாக நிற்கும் செய்து வாய்பாட்டு வினைகளின் அமைப்பைக் காணலாம்.

செய்யும் வாய்பாட்டு வினைகள் ஏவற்பொருண்மையை உணர்த்துவதுடன் எதிர்வு (அல்லது நிகழ்வு)ப் பொருண்மையும் உணர்த்தும் திறத்தனவாகும். செய்+உம் என்ற பொது அமைப்பினைக் கொண்ட இவ்வாய்பாட்டு வினைகளில் –உம் என்னும் காலக்கிளவி எதிர்வு அல்லது நிகழ்வுப் பொருண்மையைக் குறித்து நிற்கும். இத்தகைய செய்யும் வாய்பாட்டு வினைகள் –ஓன், –ஓள் –ஓர், –அர்/–ஆர் ஆகிய பால் விகுதிகளை ஏற்று, செய்யுமோன், செய்யுமோள், செய்யுமோர், செய்ம்மர்/செய்ம்மார், (-செய்யு-மர்/செய்யுமார்) முதலிய வாய்பாட்டு வடிவங்களாக வழங்கும் நிலை பழந்தமிழில் காணப்படுகின்றது.[5] இதே செய்யும் வாய்பாட்டு வினைகளை அடுத்து ஒன்றன்பால் வினைமுற்று விகுதியாகவும் வழங்கும் துகரக்கிளவி பொருந்தி நின்று செய்யுந்து (-செய்யும்+து) வாய்பாட்டு வினைகள் அமையும் நிலையும் புறநானூற்றில் காணப்படுகின்றது.

நிலைக்குந்து (-நிலைக்கும்+து. புறம் 386-15)
பறிக்குந்து (-பறிக்கும்+து. புறம் 339-3, 352-4)
பூக்குந்து (–பூக்கும்+து. புறம் 137-8, 396-2)
வழங்குந்து (-வழங்கும்+து. புறம் 396-1)
வைகுந்து (வைகும்+து. புறம் 384-9)
பாயுந்து (பாயும்+து. புறம் 24-3, 24-16)

5. இரண்டு தமிழ் விகுதிகளின் தோற்றம். இரா. கோதண்ட-ராமன், தமிழ்ப்பொழில், துணர்: 44. மலர்: 8.

செய்யுந்து வாய்பாட்டு வினைகள் தம்காலத்தில் வழங்கத் தொடங்கிய செய்தியை உம் உந்தாகும் இடனுமார் உண்டே (சொல். சேனு. 292) என்னும் நூற்பாவில் குறித்துச் செல்கிறுர் தொல்காப்பியர். செய்யும்+து என்ற பொது அமைப்பினைக் கொண்ட செய்யுந்து வாய்பாட்டு வினைகள், செய்யும் வாய்பாட்டு வினைகளின் ஈற்றுமிசை உகரம் கெட; செய்ந்து வாய்பாட்டு வடிவினவாகக் குறுகி நிற்றல் இயல்பாக நிகழத் தக்க ஒன்ருகும். கட்டளை வினைகளின் பகுதியாகிய செய்து வாய்பாட்டு வினைகளை, வடிவையொட்டி இருபிரிவுகளாகப் பிரித்து, ஒரு பிரிவில் செய்யுந்து வாய்பாட்டு வினைகளின் குறுகிய வடிவங்களாகிய செய்ந்து வாய் பாட்டு வினைகளைக் கொண்டு வரலாம். எடுத்துக்காட்டாக, கட்டளை வினைகளின் பகுதியாகிய பாய்ந்து, சேர்ந்து, நின்று, வீழ்ந்து; ஆண்டு, தின்று, நடந்து, அமைந்து, படிந்து, எழுந்து ஆகிய செய்து வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளைப் பின்வருமாறு ஆராயலாம்.

பாய்ந்து-பாயுந்து-பாயும் (-பாய்-உம்)+து.

சேர்ந்து-சேருந்து-சேரும் (-சேர்-உம்)+து.

நின்று-நில்ந்து-நிலுந்து-நிலும் (-நில்-உம்)+து.

வீழ்ந்து-வீழுந்து-வீழும் (-வீழ்-உம்)+து.

ஆண்டு-ஆள்ந்து-ஆளுந்து-ஆளும் (-ஆள்-உம்)+து.

தின்று-தின்ந்து-தினுந்து-தினும் (-தின்-உம்)+து.

நடந்து-நடய்ந்து-நடயுந்து-நடயும் (நட-உம்)+து.

அமைந்து-அமைய்ந்து-அமையுந்து-அமையும்(-அமை-உம்)+து.

படிந்து-படிய்ந்து-படியுந்து-படியும் (படி-உம்)+து.

எழுந்து-எழும் (-எழு-உம்)+து.

இவ் எடுத்துக் காட்டுக்களின் இறுதியில் நின்ற எழுந்து என்ற செய்து வாய்பாட்டு வினை செய்யுந்து என்ற வாய்பாட்டு வடிவினதாகும். உகரத்தை ஈற்றில் கொண்ட வினையடிகளின் மீது அமையும் செய்யுந்து வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகள் செய்ந்து வாய்பாட்டு வடிவினவாகக் குறுகி நிற்பதில்லை.

இறந்தகாலப் பொருண்மையை உணர்த்தும் செய்து வாய்பாட்டு வினைகளாகிய செய்து, பெய்து, கொய்து, நெய்து, எய்து, வைது, அழுது, தொழுது, உழுது, பொழுது ஆகிய பத்து வடிவங்களிலும் துகரக்கிளவி சார்ந்து நின்ற மெல்லொலி கெட்டதென முன்னர்க்குறித்தோம். இவ்வாறே செய் + உம் + து என்ற பொது அமைப்பில் கட்டளை வினைகளின் பகுதியாக நிற்கும் போதும் இப்பத்து வினைகளும் துகரக்கிளவி சார்ந்து நின்ற மெல்லொலியை இழந்தன. வேறுபட்ட இரண்டு காலப்பொருண்மைகளை உணர்த்தும் இப்பத்து செய்து வாய்பாட்டு வினைகளின் வடிவில் நிகழ்ந்த மாறுதல்களைப் பின்வருமாறு குறிக்கலாம்.

1. செய் + இம் + து-செயிந்து-செய்ந்து-செய்து-இறப்பு
2. செய் + உம் + து-செயுந்து-செய்ந்து-செய்து-நிகழ்வு/எதிர்வு.

கட்டளை வினைகளின் பகுதியாக விளங்கும் செய்து வாய்பாட்டு வினைகளை இரு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவினை செய்ந்து (-செய்யுந்து) வடிவின் கீழ்க்குறிக்கப் பெற்றது. இதே போல் காய்த்து, பார்த்து, கற்று, கேட்டு, அடித்து, நீத்து, படுத்து, பூத்து, உழைத்து என ஈற்றுமெய் இரட்டித்து நிற்பனவற்றை இன்னொரு பிரிவனவாகக் கொள்ளலாம். இவ்வினைகள் செய்து வாய்பாட்டினவாயினும், வடிவில் செய்ந்து வாய்பாட்டினவோடு பொருந்துவன அல்ல. மாறுக இவற்றைச் செய்த்து (-செய்யுத்து) வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளாகக் கருதலாம். அவ்வாறுயின் செய்யும் வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றிய செய்யுந்து (-செய்யுந்து) வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளைப்போல், செய்த்து வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளும் நிகழ்வு அல்லது எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் வினைமுற்றுகளாதல் வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு செய்த்து (-செய்யுத்து) வாய்பாட்டு வடிவினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளின் அமைப்பை ஒப்பியல் மற்றும் வாலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் ஆராயலாம். (தொடரும்)

விரைவில் எதிர்பாருங்கள்!

"அரசியல்"

முழு விளக்கமும் பின்னர்!

'தென்மொழி'க்கு நன்கொடை.

4-3-70 முதல் 9-5-70 முடிய தென்மொழியின் வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத் தமிழ் நெஞ்சங்கட்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

	உருபா
புலவர் திரு. வே நடவரசன், வடக்குப்பட்டி,	1-00
திரு. சாலை. இளந்திரையன், புது தில்லி.	14-50
திரு. அழகர்சாமி, வான் படை, பரேலி.	0-50
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	3-00
சென்னை அன்பர்கள் திருவாளர்கள்: சண்முகம், பக்தவத்சலு, பரமேசுவரன், ஆ. பா. க. மலேசுகுமார், மா. சு. மேகநாதன், (50 காசு மேனி)	2-50
திருவாளர்கள்: தாமோதரன், குரியன், பி. ஏபிரகாம், தாசன், இரா. பரமேசுவரன் (ஓர் உருபா மேனி)	4-00
திரு. மா. ஏழுமலை, கோட்டூர்.	0-50
தியாகராசன், திருக்கழுக்குன்றம்.	4-00
திரு. பொன். மாந்தனரிமா, பெங்களூர்.	2-00
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	5-00
திரு. ஏ. சு. கே. மூர்த்தி, வான்படை.	5-00
பர். திரு. பொ. இளங்கோ, உக்கரம்.	25-00
நெய்வேலி அன்பர்கள் திருவாளர்கள்: மீனாட்சி சுந்தரன், ப. கோ. சுப்பிரமணியன், பொன்-மாறன், கோ. கண்ணன், ப. திருவம்பலம், ஆ, கருப்பையா, இரா. அருட்குவை, (2 உருபா மேனி)	14-00
திருவாளர்கள்: சுந்தரம், இரா. மணிமாறன், பொழிலன், பொன்-பகலவன், கரு. நடவரசன், சி. திருமாவளவன், கலியமூர்த்தி (ஓர் உருபா மேனி)	7-00
திரு க. இராமசாமி, கோவில்பட்டி.	3-00
திரு மா. அரசு, கோபிப்பாளையம்.	1-00
திரு. மச்சபாலகிருட்டிணன், மலேசியா.	5-50
திரு. வை. சண்முகம், இனும் குளத்தூர்:	4-00
திரு. ஈ. செகதீசன், சேலம்-1.	2-00
மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	3-00

[தொடரும்]

செ. சொ. பி. பேரகரமுதலி

உருவாக்க, வெளியீட்டுத் திட்டம்.

உறுப்பினர் பட்டியல்

திருவாளர்கள்:-- 1. தாமரை பெருஞ்சித்திரன், கடலூர்-1. 2. மா. பூங்குன்றன், கடலூர்-1. 3. புலவர் இறைக்குருவன், மதுரை-10. 4. இறை. பொற்கொடி, மதுரை-10. 5. காளியப்பன், (நாராயணன்) நெய்வேலி-1. 6. செ. பன்னீர்ச்செல்வம், சென்னை-2. 7, த. வளங்கோ, புதுவை-1. 8. செ. சித்தார்த்தன், அறி. இ. (பி.எசி.) சென்னை-25. 9. கி. மகிழ்கோ, புதுவை-5. 10. திருநாவுக்கரசு, பொ. இ. வேலூர்-9.

11. புலவர் சா. அடல் எழிலன், திருவையாறு. 12. ந. முத்துக் குமரன், அறி. இ. ஆ. ப. குளத்துப்பாளையம். 13. திருச்சி மாவட்டத்தான், 14. ந. செங்குட்டுவன், திருச்சி-14. 15. அருண்மொழியன், திருச்சி-14. 16. பொற்செழியன், (வே. நா. இரேணுகோபால், பெங்களூர்-1. 18. உணர்வுப்பித்தன், (ஆ. சொக்கலிங்கம்) திருச்சி-10. 18. உளங்கவரழகன், இராசிபுரம். 19. நாவை-சிவன். (தமிழ்மகன்) கீரனூர். 20. ச. கலியமூர்த்தி, காவேரிநகர்.

21. வே. மாறன், பெங்களூர்-2. 22. சி. பூ. மணி, பெங்களூர்-21. 23. க. அப்பாத்துரை, நடுப்பட்டி. 24. ச. சின்னத்துரை, நெய்வேலி-1. 25. அன்புவாணன், (த. கோவிந்தன்) நெய்வேலி-1 26. அ. அருள்நெறி, நெய்வேலி-2. 27. ஆ. கருப்பையா, நெய்வேலி-3. 28. இரா. அப்பாவு, நெய்வேலி-3. 29. இரா. பெருந்தேவன், நெய்வேலி-2. 30. மு. அறவாழி, நெய்வேலி-1.

31. பொன்-தமிழ்மாறன் (இராமசாமி), நெய்வேலி-1. 32. தமிழநம்பி, அறங்கண்டநல்லூர். 33. புலவர் பா. வீரப்பன், ஆனைமலை, 34. நா. இளமாறன், பெகும்பகல்லாக்குடியிருப்பு, 35 க. மலர்ச்செல்வன், (தலைராசன்) மதுரை-1. 36. பா. பொ. இளங்கோ, உக்கரம். 37. செ. பெரிய நாடார், தெற்குச்சூரன்குடி. 38. சே. கு. அரசங்கோவன். மேட்டூர் அணை-1. 39. ஞா. தாமசு, மணிமுத்தாறு. 40. கே. பூபதி, பெங்களூர்-16.

41. துரை. சம்பத்குமார், க. இ. ஈரோடு-1. 42. அறவாழி, தளவாய்ப்பட்டணம். 43. இல. க. இரத்தினவேல், திருச்சிராப்பள்ளி-1. 44. சு. திருஞானம், திருச்சிராப்பள்ளி-1. 45. ஆம்பூர் கே. ஏ. மணவாளன், பெங்களூர்-5. 46. இர. பரணன், பரணம். 47. மு. வ. பரமசிவம், நடுப்பட்டி. 48. ம. சோசு; உத்தமபாளையம். 49. மு. திருநாவுக்கரசு, அண்ணாமலைநகர். 50. க. இராமசாமி, கோவில்பட்டி.

51. ஓ. பிச்சை, தெற்குத்தெரு, மேலூர். 52. இல. வேலரங்கன், சோமையனூர். 53 கெம்பீரப், பெங்களூர் 1 54. செ. பெருமாள், கடத்தூர். 55. புலவர் வ. அரிஅரன், ஒண்டிப்புதூர். 56. ந. தேவராசன், வேலூர்-1. 57. க. செகநாதன், பி.எசி. ஈரோடு. 58. இராசமாணிக்கம், காரைக்குறிச்சிப்புதூர். 59. வெ. கிழார், பெங்களூர்-21, 60. சா. பொழிலன், நெய்வேலி-2.

61. கா. சே. சாத்தப்பிள்ளை, பி. எசி. பி. டி. ஆமூர். 62. புலவர். கா. இளமுருகன், புன்செய்ப்புளியம்பட்டி. 63. ப கு முருகவேள், புன்செய்ப்புளியம்பட்டி. 64. புலவர் நா. அருணன், எரங்காட்டுபபாளையம். 65 பா. அறவாழி, சென்னை-7; 66 அ. வெள்ளிமலையார், திருச்சிராப்பள்ளி-8; 67 சாலை. இளந்திரையன், எம்.ஏ. எம் லிட், புதிய தில்லி-5. 68 செ வெற்றிவேந்தன் (செயராமன்) நிலமலைத்தோட்டம-இராசிபுரம்; 69. மூல்லைவாணன், சிங்கை; 70 ந. இராசகோபாலன், தஞ்சாவூர்-1.

71 அகத்தி கிருட்டிணன், இ. அ (வேளாண்) சோளிங்கபுரம். 72 ஏ. கே. மணி, பி. இ, ஏ. எசு. எசு-1. பெங்களூர் 28 73 வே. ஐயனப்பிள்ளை, வேம்பனூர்; 74 வ. கௌரிநாதன், திருச்சி-14 75 எழிலரசன். திருச்சி-14 76 பொன்-தங்கவேலன், பெங்களூர்-15 77 தி. எழிலரசன், (இரமணி, மதுரை-3) 78 பொன்-மாறன், (இராமகிருட்டிணன்), மதுரை-3. 79 மறை-நித்தலின்பன், கோவை 80 தமிழ்க்கூத்தன், கருந்திட்டைக்குடி.

81 புலவர் ச. தமிழ்வேலன், மீஞட்சிபுரம். 82 அ. இளங்கோ பி. எசி. பி. டி. பெருமாம்பாளையம் 83 புலவர். த, மாணிக்கம். கூகலூர் 84 புலவர் திரு. மாரி. விசுவநாதன், வால்பாறை 85 பா. வளன் அரசு, க. மு. திருநெல்வேலி-2 86 கரு. பேச்சிமுத்து, திருச்சி 14 87 அ. சாமிக்கண்ணு, அரூர் 88 கே. அரசு, பெங்களூர்-21, 89 ந. சுப்பையா. அருமடல்; 90 த. சுப்பிரமணியன், செட்டிக்குளம்

91 த. வையாபுரி, ஆனைமலை; 92 எசு. கே. எசு. காதர், அம்பாலா; 93 இர. சு. கிருட்டிணன், கீழ்த்தென்குலம்; 94 அ. மீ. இராமமீர்த்தி, திருவாரூர். 95. வை. வேதையன். திருவாரூர். 96. த. சரவணத்தமிழன், திருவாரூர். 97. மா. இறைவன், திருச்சி-14. 98. த. அன்பழகன், கடலூர்-1. 99. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி. 100. பெ. அன்னகாமு, கெ. கல்லுப்பட்டி.

101 க. நாராயணன், பெகும்பகல்லாக்குடியிருப்பு; 102 வி. இராசமாணிக்கம்,எம். ஏ. கோயமுத்தூர் 18; 103 மு. கதிரவன் நெமலி; 104 அ. கிருட்டிணசாமி, பெங்களூர் 21; 105 துரை-தெட்சிணாமூர்த்தி, மேலச்செம்மங்குடி; 106 க. சிவானந்தன், திருமலைராயன்பட்டினம்; 107 அரங்க-திருமாறன், புதூர், உரத்தநாடு; 108 க. அன்புமணி, திருச்சி 15; 109 கரி. நடவரசன், நெய்வேலி 3; 110 இரா. தமிழன்பன், வேப்பங்குறிச்சி.

111 ப. துரையரசன், கைகாட்டிப்புதூர்; 112 கோ. நிலவழகன், க. மு. சென்னை 30; 113 க. சி. அகமுடைநம்பி, பி. இ, மதுரை; 114 சு. வலங்கைப்பாண்டியன் மதுரை; 115 சி. குமாரசாமி, எல். எம். இ., மதுரை 116 பொன்-இராமானுசம், சுத்தமல்லி; 117 நெல்லை சு. மணியன், திருச்சி 2; 118 முத்து-செல்வன், அலதூர்; 119 ஆ. ப. தொல்காப்பியன், மொ. ஆலமரத்துப்பட்டி; 120 இரா. தங்கராசன், மாரம்பாடி.

122 ப. பெரியசாமி, விருதுநகர்; 122 பழங்கரைவேள், பழங்கரை; 123 இந்திய வான்படைத் தமிழன்பர்கள், 124 உ. த. ச. பெங்களூர் நகரக்கிளை; 125 செ. தென்னவன், கவுண்டன் பாளையம்; 126 காரை-இறையடியான், காரைக்கால்; 127 காரை-அலீம், காரைக்கால்; 128 தே. நே. சித்திரச்செல்லி, ஆரூர் 129 புலவர் இ. தேவநேயச்சித்திரன், கீ. அ. செங்கழுநீர்ப்பட்டு. 130 வே. மு. பொதியவெற்பன், செங்கழுநீர்ப்பட்டு.

131 ந. அரணமுறுவல், கீ. அ. நாயனூர்பாளையம். 132 த. முத்துக்குமரன், ச. இ. பாம்பூர்; 133 ஆர். வேணுகோபால், புதுவை-1; 134 இரா. செயராமன், நெய்வேலி 2 135 திருவாட்டி வேளாங்கண்ணி உரோசுமரி, தி. அத்திப்பாக்கம்; 136 தி. ஆ. சண்முகசுந்தரம், திருச்சி 1; 137 மு இளம்பரிதி, உரத்தநாடு; 138 ப. இளம்வழுதி, உரத்தநாடு. 139 ந. இளமுருகன் அறி. இ. ஆ. ப. நீடாமங்கலம்; 140 பி. என். அப்பாசி கவுண்டர், காளிங்கராயன்புதூர்.

141 சிங்கை செங்கோடன், அம்மாப்பேட்டை, தஞ்சை; 142 இரா. தமிழ்வாணன், நாயனூர்பாளையம்; 143 அ. தங்கராசன், ஈப்போ, மலேசியா; 144 கு. அண்டிரன், நாயனூர்பாளையம் [தெ. ஆ] 145 ப. தாயம்மாள் அறவாணன், சென்னை 29; 146 ச. பாண்டியன், ஈப்போ, மலேசியா; 147 பெ. புதுமைப்பிரியன், மலாக்கா; 148 புலவர் ஞா. நன்முல்லை, விரியூர்; [தெ ஆ] 149 இரா. வெற்றியரசு, நெய்வேலி 1; 150 ப. நன்முல்லை, சிங்கை.

151 இரா. அருட்குவை, நெய்வேலி 3; 152 அ. குமணன், சிங்கை; 153 இ. எசு. சி. மூர்த்தி, பெங்களூர் 16; 154 தூரை அருண்மொழி, நெய்வேலி 1; 155 செ. மேதலைவன், நெய்வேலி 3 156 த. செகந்நாதன், அம்பலாப்படைவீடு; 157 இறைவாணன் சிங்கப்பூர்; 158 ப. தண்டபாணி, கான்பூர்; 159 சே. கணபதி, மலேசியா; 160 புலவர்-குமர. தன்ஞெளியன், கண்ணமங்கலம், (வட ஆ. மாவட்டம்)

151 ஏ. செல்வராசு, கான்பூர் 8; 162 செந்தமிழ்ச்சேய், பொறி இ. அரசூர், தெ. ஆ. மாவட்டம்; 163 உடுமலைப்பேட்டை அன்பர்கள் அமைப்பாளர் கி. சீதாராமகுப்தா; 164 ம. துரைசாமி, பீடோங்-மலேசியா; 165 எம். ஏ. இளஞ்செல்வன், (எம். இராமு) பீடோங்-மலேசியா; 166 பெ.அரசு, மலாக்கா; 167 இரா. காளிமுத்து கோலாலம்பூர்; 168 மருத்துவர் சி. இராமச்சந்திரன், சேலம்; 169 பி. இலக்குவன், குவைத்து; 170 புலவர் கா. சு. சண்முகம், பல்லடம்.

171 புலவர் ப. சுப்பையன், நாச்சிப்பாளையம், திருப்பூர்; 172 புலவர் திருமேனி, நாகராசன் காரைக்கால்; 173 காரை-அறவாழி, காரைக்கால்; 174 மு. துரைச்சாமி, க. மா. அ. சுலுத்தான்பேட்டை, பல்லடம்; 175 க. தமிழப்பன், அ. அரங்கசாமி, திருப்பூர் 2; 176 சி. அறிவுறுவோன், அம்மையகரம்; 177 திருவாட்டி இராசேசுவரி செந்தில், அம்பாலா; 178 கல்லூர் மணியம். மலாக்கா, 179 பறம்பை. தென்னவன், பறம்புக்குடி. 180 பொ. பொன்னரசன், க. இ, மேலூர்.

181 அர. இராசேந்திரன், க. இ. குளத்துப்பாளையம், பல்லடம். 182 அதியமான், சா. முருகு, ஆசிரியர், அதியமான்குப்பம், திருமுதுகுன்றப். 183 மு. பொய்யாமொழி, பேர்பெரியாங்குப்பம்; (தெ. ஆ) 184 துரை-வேழவேந்தன், பேர்பெரியாங்குப்பம் (தெஆ) 185 சி. இராசாங்கம், அறி. இளை. தஞ்சாவூர். 186 கு. பெருந்துரை; அதியமான்குப்பம். திருமுதுகுன்றம். 187 பொன். பகலவன், நெய்வேலி 3; 188 கோ. கண்ணன், நெய்வேலி 3; 189 பொன்-தமிழ்முல்லை, சிங்கப்பூர்-2; 190 ‘கோவை மாவட்டத்தார்.’

மகப்பேற்றுக்கு நன்கொடை

தென்மொழி அன்பர் தொட்டியப்பட்டி (சேலம்) திரு. **தொ. செ. கந்தசாமி** *(பகுத்தறிவன்) அவர்கட்கும் அவர்தம் துணைவியார்* **நீலாம்பாள்** *அம்மையாருக்கும்* **கன்னி** *‘அ’ ஆம் நாள் (26-10-71) அன்று* **ஆண் மகவு** *பிறந்து* **காந்தி அறிவுடைநம்பி** *என்று பெயர் சூட்டப்பெற்றது. அதன் நினைவாகத் தென்மொழிக்கு விடுத்த உருபா 10-ஐ நன்றியுடன் பெற்றுக்கொண்டோம். காந்தி அறிவுடைநம்பியும் அவன்றன் பெற்றோரும் நீடு வாழ மனமுவந்து வாழ்த்துகிறோம்.*

—சிறுகதை

தாழ்வுக்கும் அது தான்! உயர்வுக்கும் அது தான்!

தஞ்சை—எழிலன்பன்

(ஆசிரியர் குறிப்பு:– 'தென்மொழி' *யில் கதைகள் வருவதேயில்லை - என்னும் குறைபாடு நம் அன்பர்களுக்கு என்றும் உண்டு. 'தனித்தமிழில் இயலாததுதான் அதற்குக் காரணம்' என்பார், மொழியறிவற்ற மூங்கையர் சிலர். இக்கூற்றைப் பொய்யாக்க அவ்வப்பொழுது* தென்மொழி *சில கதைகளை வெளியிட்டுள்ளது. கதை இலக்கியம் நமக்கு ஆகாததன்று. கதைபேசிக் காலங்கடத்தும் நிலையில் நாம் இல்லை. தமிழன் இன்னும் தன் அடிநிலையையே செப்பப்படுத்திக் கொள்ளாமல் இருக்கும்பொழுது கதைகளில் கவனம் செலுத்துவதை என் உள்ளம் விரும்பவில்லை. தனித்தமிழன்பர்கள் பலர் சிறந்த சிறு கதைகளைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்தவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அவர்களை வளர்த்து விட்டால் இன்றுள்ள 'பெரிய' 'கதை'ப்பாளர்களில் பலர் சில நாட்களில் இருந்த இடம் தெரியாமல்போவர் என்பதையும் உணர்வேன். தேவையான பொழுது தேவையான எந்தத்துறையிலும் தனித்தமிழ் புகத் தயங்காது. ஆனாலும் இன்றைய நிலையில் நம் நோக்கம் வேறு. போக்கு வேறு. இருப்பினும் தனித் தமிழ்ப் பகைவர்கள் தம் வாயை அடைக்க அவ்வப்பொழுது சில சிறந்த கதைகளையும் தென்மொழியில் வெளியிட எண்ணங் கொண்டுள்ளேன். ஏற்கனவே வந்துள்ள கதைகளில் தகுதியுள்ளவை இனி வரிசையாக வெளியிடப்பெறும். நம் எழுத்தாளர்களும் நல்ல கதைகளை அனுப்பி வைக்கலாம்.* —**பெருஞ்சித்திரன்**)

அந்தக் கூட்டுறவுக் கழகக் கட்டிடத்தினுள் நுழைந்த பொன்னையா, அங்கிருந்த ஒரு பணியாளனிடம் 'தலைவர் இருக்கிறாரா?' என்று வினவினார். அந்தப் பணியாளனின் கை நீண்டு ஓர் அறையைக் காண்பித்து விட்டுச் சுருங்கிக்கொண்டது.

தள்ளுகதவினருகில் வந்து நின்ற பொன்னையா, முதலில் தான் வந்திருப்பதைத் தெரிவித்து விட்டு உள்ளே போகலாமா, ஒன்றும் தெரிவிக்காமலே கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழையலாமா என்று சிறிது எண்ணமிட்டார். எப்படியோ, அவர் உள்ளே சென்றுதானாகவேண்டும். அவர் வந்த அலுவல் அத்தகையது.

அப்போது உள்ளே நிகழ்ந்து கொண்டிருந்த உரையாடல் பொன்னையாவின் கருத்தை ஈர்த்துச் சற்று வெளியே நிற்கச் செய்தது.

'என்னய்யா சொல்கிறாய்? உன்னை நம்பியதற்கு இது தான் பலனா?'

'எனக்காகச் செய்யவில்லை'ங்க? என் பிள்ளைக்குட்டிகளைக் காப்பாற்றத்தான் இப்படி...பிறகு சரிசெய்து விடலாமென்று....'

'பிள்ளைக்குட்டி ஒரு காரணமா? சரி, ஒரு முறை தவறினால் போய்த் தொலைகிறாய் என்று விடலாம். ஆனால் எத்தனை முறை? ஏன்? பிறகு பழகிப் போய்விட்டது? இல்லையா?'

சிறிது நேரம் அமைதி.

''சே, சே! இந்தநேரம் பார்த்துஅந்த ஆய்வாளன் வேறுவந்து தொலைக்கப்போகிறான். வருபவன், இன்ன நாளில் வருவதாகத் தெரிவிக்காமல் இந்தக்கிழமைக்குள்வருவதாகத் தெரிவித்திருக்கிறான். எந்த நேரத்தில்வந்து என் கழுத்தை அறுக்கப்போகிறானோ என்று நான் தவித்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நீ முன் கூட்டியே எனக்குக் குழிபறித்து வைத்திருக்கிறாய், சரி. சரி. இனி, நான் சொல்வதற்கில்லை. நீ செய்தவைக்கு உரியதை அடைவதைத் தவிர வேறு வழியுமில்லை. நீ போகலாம்''

'ஐயா! நான் பிள்ளைக்குட்டிக்காரன். எனக்கு ஏதேனும் நேர்ந்து விட்டால்.......'

தள்ளுகதவு குரல் கொடுத்தது.

தலைவரும் ஊழியரும் திரும்பினர். உள்ளே பொன்னையா, நுழைந்து வந்தார்.

'நீங்கள்.......'

'நான் தான் உங்கள் கழகக் கணக்கு வழக்குகளை ஆய்வதற்காக வந்திருப்பவன்.' பொன்னையா 'வழக்குகளை' என்ற சொல்லை அழுத்திச் சொன்னார்.

தலைவர் நிலைமேடை விளிம்பைப் பற்றிக் கொண்டார். அந்த ஊழியனிடமும் சிறிது நடுக்கம் பரவியது. இவற்றைக் கண்ட பொன்னையாவின் முகத்தில் முறுவல் அரும்பியது. தொடர்ந்து—

இரண்டு நாட்கள் பொன்னையாவின் பொறுமை எல்லைமீறும் அளவுக்கு அந்தக் கூட்டுறவுக் கழகக் கணக்குகள் இருந்தன.

''என்ன ஐயா! இந்தக் கணக்கில் இரண்டாயிரம் உருபாவுக்குச் செலவுச் சான்று கொடுக்கப்படவில்லையே!'' பொன்னையா வினவினார்.

இதற்குத் தலைவர் அலட்டிக் கொள்ளவில்லை. காரணம் இதெல்லாம் அவருக்குப் பழகிப் போன ஒன்று தான். பொன்னையா வைப்போன்ற எத்தனையோ ஆய்வாளர்களைப் பார்த்துப் பார்த்து இதைப்போன்ற எத்தனையோ வினுக்களைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போய்விட்டது அவருக்கு. அதனுல்—

'அதுவா? அது வந்து... .. ம் .. ...உங்களிடம் சொல்லு வதற்கென்னங்க! என் மனைவி காசு மாலை வேண்டுமென்று ஆசைப் பட்டாள்......'

'ஓகோ இதை அதுவாக்கிக் கொண்டீர்களாக்கும்'

முகத்தின் முறுவல் மாருமலே பொன்னையா பேசியது தலை வரின் அடிமனத் தவிப்புக்குத் தக்க மருந்து கொடுத்ததாக இருந் தது. வயிறு குலுங்கச் சிரித்தார்.

'அது போகட்டும். இந்தக் கடன் தொகைக்கெல்லாம் சரியான... '

'என்னங்க நீங்க...' தலைவர் கொஞ்சலுடன் பொன்னையாவை அலுத்துக் கொண்டார். பொன்னையா அவருக்கு மிகத் தங்கமான வராகப் போய் விட்டார். இந்நேரம் வேறு ஆய்வாளராக இருந்திருந் தால் இந்தக் கணக்கு வழக்குகளுக்கு அவர் அடிக்கும் கொட்டம் சொல்லி முடியாது. அதன் பிறகு அவர் வாயை அடைப்பது என் பது வழக்கமான ஒன்றுதான். ஆனுல் இந்தப் பொன்னையா மிகவும் பழகிப் போனவர் போலிருக்கிருர். அதனுல்தான் தாமும் அலட்டிக்கொள்ளாமல் அவரையும் ஆட்டி வைக்காமல் நடந்து கொண்டார். அதனுல்—

'என் பெண்ணின் பிறந்தநாள் விழாவை இந்த ஆண்டு எவ்வளவு சிறப்பாகக் கொண்டாடினேன் தெரியுமா?' என்று குறைந்த தொகை மறைந்த குறிப்பைப் புலப்படுத்திஞர் தலைவர்.

'ஆக, உங்களின் மனைவி மக்களின் ஆவலை நிறைவேற்றி வைக்கத்தான் இப்படியெல்லாம் செய்திருக்கிறீர்கள் அப்படித்தானே'

பூரித்துப்போஞர் தலைவர். பொன்னையா அவரைப் புரிந்து கொண்டு விட்டார். இனி அவரை இரண்டு மூன்று தாளுக்குள் மடக்கி வைத்து விடலாம் என்று களிப்பில் மூழ்கிஞர் தலைவர்.

'அதுவே தானுங்க! எனக்கென்ன இத்தனை ஆண்டுக்கு மேலே....என் மனைவி மக்களின் மகிழ்ச்சிக்காகத்தான் நான் பாடு பட வேண்டியிருக்கிறது.'

'அது சரி அன்று நான் வந்தபோது ஒருவரைக் கடிந்து கொண்டிருந்தீர்களே ... அவர் கை வைத்தது எவ்வளவு இருக்கும்?'

'அது...சும்மா ஓர் இருநூறு அல்லது முந்நூறுதான் இருக்கும்.'

'இவ்வளவு தானு? அதற்கு அவர் என்னகாரணம் சொன்ஞர்?'

'அவன் ஒரு ஏழை'ங்க. இங்கே வாங்குகிற சம்பளம் கட்டாதுதான். தன் பெண்டு பிள்ளேகளேக் காப்பாற்ற ஏதோ ஓர் இக்கட்டான நேரத்தில் கொஞ்சம் கை வைத்த பிறகு அது பழகிப் போய் ...... எல்லாம் அவன் பிள்ளேக்குட்டிக்காகத்தான் இப்படியெல்லாம் செய்திருக்கிருன்.'

பொன்னேயாவால் சிரிப்பை அடக்கிக்கொள்ள முடியவில்லே.

'நல்ல வேடிக்கை! அவரும் பிள்ளேக்குட்டிகளால் தான் தவறு செய்து விட்டார். நீங்களும் அதே பிள்ளேகுட்டிக்களேத்தாம் காரணங் காட்டுகிறீர்கள். இருவருக்கும் ஒரே காரணம்! அவர் அந்தப் பிள்ளேக் குட்டிகளின் வயிற்றை நிரப்பத் தவறு செய்தார். நீங்கள் உங்கள் மனேவி மக்களின் மனத்தை நிரப்ப இப்படிச் செய்திருக்கிறீர்கள்'.

தலேவரும் சிரித்துக்கொண்டார். அவர் தலே தாழ்ந்திருந்தது.

'உம் ... சரி!'

பெரு மூச்சுடன் விரிந்து கிடந்த கணக்குச்சுவடிகளே அடித்து மூடிவிட்டு எழுந்தார் பொன்னேயா. அவர் எடுத்திருந்த புள்ளி விளத்தங்களேயும் கையில் எடுத்துக்கொண்டார்.

தலேவர் நிமிர்ந்தார்.

'மூன்று நாட்கள் உங்களுக்குத் தவணே கொடுக்கிறேன். அதற்குள் எடுத்ததையெல்லாம் திரும்பப் போட்டுவிடுங்கள் இல்லேயேல்.......'

பொன்னேயா வெளியேறி விட்டார்.

தலேவரின் முகம் ....

2

பொன்னேயாவின் வீட்டை அடைந்த பின்பு தான் இருண்டிருந்த தலேவரின் முகம் சற்றுத் தெளிந்தது. காரணம். பொன்னேயாவின் வீடு இருந்த நிலே தான்.

அவ்வீடு ஓர் ஆய்வாளர் வீடு போல் இல்லே. சிதைந்த சுவர்; சுவரில் மழை பெய்தால் மேலே ஒழுகும் என்பதைக் காட்டும் மழைநீர்க் கோடுகள். வீட்டின் தரையும் குமுகாய மேடு பள்ளங்களின் எடுத்துக்காட்டாக இருந்தது. வெளித் திண்ணேயும் முனே இடிந்து செங்கற் பற்களேக் காட்டிக் கொண்டிருத்தது. ஓட்டு வீடு தான்; ஆனுல் அதற்கு ஓலேக்குடிசை தாழ்வில்லே. வீட்டின் உள்ளும் புறமும் தூய்மை நிலவியது உண்மைதான்; ஆனுல் அதில் ஒரு மேல் நிலே அலுவலரின் வீட்டுக்குரிய கவர்ச்சியில்லே. வீட்டினுள்ளே நாலேந்து சிருர்களின் அடிபிடிச் சண்டை. ஒரு சிறுவன் வெளியே ஓடிவந்தான். அவன் உடையில் புழுதிக் கோலம்; உடலில் எலும்புக் கோடுகள்.

'ஒரு வேளை வீடு மாறி வந்துவிட்டோமே' என்று எண்ணினார் தலைவர். ஆனால் உள்ளிருந்து பிள்ளைகளை அதட்டும் பொன்னையாவின் குரல் தலைவரின் ஐயப்பாட்டை அகற்றியது. அத்துடன் ஏழ்மை வாய்ப்பட்ட எத்தனையோ கோழைகளுக்கு எலும்புத் துண்டுகளை வீசியெறிந்து பயன்படுத்திக் கொண்ட பழக்கம் தலைவரின் நெஞ்சத்தில் பொன்னையாவின் வறுமை நிலையை அறிந்ததும்- தலை நீட்டியது.

வெளியே ஓடிவந்த சிறுவன் அவரைக் கண்டு விட்டு உள்ளே ஓடினான். சிறிது நேரத்தில் பொன்னையா மேலே உள்ளொட்டியும் இடையில் வேட்டியுமாக வெளியே வந்தார். வரும்போதே கையில் ஒரு பழம்பாயையும் கொண்டு வந்தார். தலைவரை வரவேற்றுத் திண்ணையில் அமரச் சொன்னார். ஆனால் தலைவருக்கு அந்தப் பாயில் அமர உடல் கூசியது. மேலும்—

அவர் அங்கு வந்த நோக்கம் வெளியில் இருந்து கொண்டு பேசத்தக்கதா?

'உங்களிடம் தனியாக...'

'ஓ! நான் இப்பொழுது தனியாகத்தான் இருக்கிறேன். பிள்ளைக்குட்டிகள் எல்லாரும் உள்ளே இருக்கிறார்கள்'.

வேறு வழியில்லை; தலைவர் வெளியே அச்சிதைந்த திண்ணை மீது பழம்பாயில் அமர்ந்து விட்டார்.

'ஏங்க? உங்களுக்கு ஊதியம் இருநூறுக்கும் மேலே இருக்குமே!' தலைவரின் பேச்சில் பசை இருந்தது.

'இருக்கும்'

'அவ்வளவு வந்துமா வீட்டை இப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனக்குத் தெரிந்த ஆய்வாளர்களெல்லாம் எப்படி இருக்கிறார்கள் தெரியுமா?'

'என்ன செய்வது? நான் பிள்ளைக்குட்டிக்காரன். இதற்குள் அவர்களைக் காப்பாற்றியாக வேண்டுமே. வீட்டை எங்கே சீர்ப்படுத்த முடியும்?.

'மனம் வைத்தால் முடியாததும் இருக்கிறதுங்களா'? என்ற தலைவர் தனது மடியில் கை வைத்தார். ஓர் உறையை எடுத்துப் பொன்னையாவின் அருகில் கூச்சத்துடன் நகர்த்தினார்.

'இதில் ஐந்து (ஐநூறு) உருபா இருக்கிறது'

அவர் தன்னை மனம் வைக்கச் சொன்னதன் பொருளைப் பொன்னையா புரிந்து கொண்டார். வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைத்துப் பேசுவதன் பொருளைத் தலைவர் புரிந்து கொள்ளவில்லை என்பதையும் பொன்னையா உணர்ந்து கொண்டார். அந்தப் பழம் பாயைக் கண்டதும் அதில் அமரத் தலைவருக்கு உடல் மட்டுந்தான்

கூசியது; தலைவர் தந்த உறையிலுள்ள பச்சைத் தாள்களைக் காணு மலேயே பொன்னையாவுக்கு உள்ளம் கூசியது.

அந்த உறையைப் பொன்னையாவின் நுனி விரல்கள் தலைவ ரிடமே நகர்த்தின.

'இதோடு மிகுதித் தொகையையும் சேர்த்துப் போட்டு விடுங்கள். அது தான் உங்களுக்கும் நல்லது; எனக்கும் நல்லது' பொன்னையா அமைதியாகச் சொன்னார்.

'உங்களால் முடியாதா?' தலைவர் கொஞ்சம் மிரட்டிப் பார்த்தார்.

'முடியாது' பொன்னையா அம்மிரட்டலை விரட்டினான்.

'நான் பிள்ளைக்குட்டிக்காரன். என் மானம் பறிபோனால் பிறகு......' தலைவர் மருண்டார்; துண்டால் முகத்தை ஒற்றிக் கொண்டார்.

இதற்குப் பொன்னையா கடகடவெனச் சிரித்து விட்டார். சிறிது நேரம் அவரால் அச்சிரிப்புக்குத் தடை போட முடியவில்லை. இந்தச் சிரிப்பு, முன்னர், அந்தக் கூட்டுறவுச் கழகப் பணியாளன் தன் பிள்ளைக்குட்டிகளுக்காகத் தான் தவறு செய்தான் என்று தலை வர் காரணங் காட்டியபோது அடக்கமுடியாமல் சிரித்தாரே அத் தகைய சிரிப்புத் தான் இதுவும்.

'நல்ல வேடிக்கை பார்த்தீர்களா? நீங்கள் எல்லாரும் தகாத செயல்களைச் செய்வதற்கு எந்தக் காரணம் துணை வருகிறதோ அதே காரணந்தான் எனக்கும் துணைக்கு வருகிறது; துணிவைக் கொடுக்கிறது; தகாத செயல்களைச் செய்வதினின்றும் என்னைத் தப்பிக்க வைக்கிறது. அ'து என்ன தெரியுமா?'

தலைவர் பொன்னையாவைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் காதுகளில், வீட்டினுள்ளே சிறுர்கள் கூத்தடித்துக் கொண் டிருந்த ஓசையும், அவர்களை அடக்கிக் கொண்டிருந்த பொன்னை யாவின் மனைவியின் குரலும் மோதிக் கொண்டிருந்தன.

பொன்னையா அவரைப் பார்த்தவாறு, சொன்னார்.

'நான்... பிள்ளைக்குட்டிக்காரன். நான் அவர்களைக் காப்- பாற்ற வெளியே இருந்து தான் பிழைக்க வேண்டும்.'

தலைவர் தள்ளாடியவாறு எழுந்தார். அப்பொழுது—

'ஈன்றாள் பசி காண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை'

என்று படித்துக் கொண்டிருந்த ஒரு சிறுவனின் குரல் தலைவரின் கால்களை இயங்கச் செய்தது. சிறிது தொலைவு நடந்த தலைவர் திரும்பிப் பார்த்தார்.

பொன்னையாவின் மனைவி சாணம் தெளித்துக் கொண் டிருந்தாள்; தலைவர் இருந்த இடத்திலுந்தான்! 0

0: 277: தென்மொழி சுவடி-9, ஓலை: 3-4 இதழைக் கண்டேன் நமக்கு வந்த மடல்களில் தங்களைப் பற்றிப் புதுவையூரன் என்பார். காஞ்சியில் பழித்துரைத்திருந்ததாக அறிந்து மிகவும் வருத்தமும் துயரமும் அடைந்தேன். தமிழே தன் மூச்சு, தமிழின, நாடு விடுதலையே தன் கடன் எனக் காலமெலாம் தன்னலமின்றி உண்மைக்குப் பாடுபட்டுத் தன்னையே அழித்துக் கொண்டு வரும் தங்களையா புதுவையூரன் நாக்கூசாமல் எழுதியுள்ளார்? இதை ஓர் ஆரியப் பார்ப்பனன் எழுதியிருந்தால் கூட நான் இவ்வளவு கவன்றிருக்க மாட்டேன். ஒரு தமிழன்; தமிழ்த் தாயின் தவப்புதல்வனை, தன் உடன்பிறப்பை இகழ்கிறான் எனில் எனது குருதி கொப்பளிக்கின்றது. கண்ணீர் மல்குகிறது. மனம் தவிக்கின்றது! இப்படி நமக்குள் குறை கூறிக் கொள்வதை, மோதிக் கொள்வதை; ஒரு நிலைக்களனாகக் கொண்டுதான் ஆரியப் பார்ப்பனர்கள் தங்களின் பிரித்தாலும் கொள்கையைப் பயன்படுத்தித் தமிழர்களை இன ஒற்றுமையில்லாமல் அழிவு செய்து வருகின்றனர். அவர்கள் பிடியினின்று தமிழகம் விடுபட்டுச் சீர்பெற, ஆட்சியில் வீற்றிருக்கும் நம் அமைச்சர்களுக்கு திரு **பெருஞ்சித்திரன்** அவர்கள் அறிவுரை கூறுகின்றாரே ஒழிய காழ்ப்பால் பகையுளத்தால் எழுதுகின்றார் அல்லர். இதை அன்பர் புதுவையூரன் தெரிந்து தெளியட்டும். உண்மை என்றும் மறையாது. ஒரு நாள் உலகுக்குத் தெரியத்தான் போகிறது. உண்மையின் மொத்த உருவமாகிய தாங்கள் ஒன்றுக்கும் மனம் தளராதீர்கள். தங்களின் கருத்துகளை அள்ளித் தந்து கொண்டே இருங்கள். தாங்கள் எதற்கும் அஞ்சாமல் அரிமா நடைபோடுங்கள்! நாங்கள் பின் தொடர்கிறோம்! —ந. **தேவராசன்**, வேலூர்-1.

0: 278: பேரன்புசால் ஐயா அவர்கட்கு, வணக்கம். இத்திங்கள் தென்மொழியில் பயனுள்ள திட்டமொன்றைத் துவக்கி யிருப்பது கண்டு பெருமகிழ்வு கொள்கிறோம். மருத்துவ நூற்கள் மொழிபெயர்க்கப்பட்ட பின், அவ்வழியே பொறியியல் நூற்களையும் பிற துறை நூற்களையும் மொழிபெயர்க்க ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்: இத்திட்டங்களனைத்தையும் திறம்படச் செயல் படுத்தத் தென்மொழியால் தான் இயலும். நந்தமிழ், இலக்கிய மொழியாய் மட்டுமிராது, தலைசிறந்த அறிவியல் மொழியாயும் இலங்குதல் வேண்டும். தங்கள் பணி நீடு சிறக்க.

—இரணியன், திருப்பூர்-2.

0: 279: அன்பு சான்ற அண்ணா, வணக்கம். '**அரசியல்**' இதழ் வெளிவருதல் குறித்து மகிழ்கின்றேன்: உ. த. க. - பகுத்தறிவாளர் கழகம் போன்ற சீர்திருத்த அமைப்புகள் தேவையே. ஆயினும் அவை பொருளியல் அரசியல் கவனம் பெற்றாலே உயர்நிலை அடையும் என்பது தெளிவு. பொதுமையை இம்மண்ணிற்குத் தக அமைக்கத் தங்கள் '**அரசியல்**' உதவ வேண்டும். **அரசியல் கட்சிகள்**' பற்றிய தங்கள் திறனாய்வுகளைத் தென்மொழி வாயிலாக ஓரளவு தெரிந்துள்ளோம். ஆனால். '**கட்சி**' என்ற நிலையை உருவாக்காமல் '**அரசியலை**' எப்படி இங்கு வளர்க்க முடியும்? இதற்கான விளக்கத்தை அவாவியுள்ளேன்! அண்ணா, எல்லாவகையிலும் '**தளர்ச்சி**' யுற்றிருக்கும் என் போன்றோர் நிலையை மாற்ற '**அரசியல்**' உதவ வேண்டும். உதவுமா? அரசியல் திட்டம் உருவாக்கிக் கிடைப்பவருள் தக்காரை வைத்து மாவட்ட, வட்ட, நகர அளவில் தாங்களோ, அல்லது தங்கள் வழி நிற்பவரோ சென்று, அமைப்பினை உருவாக்க வேண்டும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

தமிழ்ப்படை, தென்மொழிக் கழகம், உ. த. க, போன்ற எண்ணங்களை உருவாக்கிய குழுகாய அடைவுகளை நிலையாகக் கொண்டு 'அரசியல்' இதழும், அமைப்பும் தோன்றவேண்டும். செயல் மலர இச்சீரிய பணியை மே[illegible]காள்வோம். பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலகிக்[illegible]ட பின், சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தில் ஈடு கொ[illegible]பின், தங்கள் 'அரசியல்' பற்றிய துணிவு எனக்கு மகிழ்ச்சி அள[illegible]பதாக உள்ளது. காரணம், அரசியல் தீர்வுகளின்றி எதுவும் நடைபெறுதென்ற துணிவுடையவன் யான். 'அரசியல்' அமைப்பை உருவாக்கும்போது, கட்டுக் கோப்புள்ள ஓரியக்க நடைமுறைகளை முன்னோட்டமாகக் கொள்ளலாம். 'பொதுமைக் கட்சி' முடிவாற்றும் முறைகளை ஏற்றுக் கொள்ளலாம். அண்ணா, இம்மடல் தங்கள் உள்ளத்தைத் தொடவேண்டும். தொடுவதற்குரிய காரணம் 'என் நீண்டகாலத் தொடர்பின்மை' யாகலாம்.

—பறம்பை அறிவன், பறம்புக்குடி.

0: 280: பாவலர் ஏறே! அன்பு வணக்கம்!! கடல் கத்தும் ஒலிபோல் தென்னவன் மொழி பாடும் தங்கள் இதழ் சில காணும் பேறு பெற்றேன். அலகு சால் கற்பின் அறிவுநூல் கல்லாது கழிந்த நாளையெண்ணி வருந்துகின்றேன். கழகத் தமிழை அரியணையேற்றிப் பொங்கும் அதன் எழிற்கு ஊறு விளைவிப்போரை விளை நிலத்தில் களையெடுப்பதுபோல் களைந்து, தமிழ் நாட்டவருக்கு ஒளி மிகுந்த எதிர்காலத்தைப் பெற்றுத்தரும் உயரிய தங்கள் கொள்கைக்கு உயிரும் கொடுக்க என்னை ஆயத்தப்படுத்திக் கொள்வேன். மற்றவர்களும் தங்களது உயரிய நோக்கத்தை உணர்ந்து செயல்பட என்னால் இயன்றது அத்தனையும் செய்வேன்.

—மணியன், சில்லாங்-9 அசாம்.

0: 281: தமிழக அரசு மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி உருவாக்கத்திற்கு ஆக்கமளிக்காமல் போனதற்குக் கழுவாயாக, தமிழ்நாட்டின் வரலாற்றைப் பண்டாரகர் மு. வ. அவர்களைத் தலைவராகக்கொண்டு உருவாக்க முனைந்திருக்கிறது போலும்! ஏழு இலக்கம் உருபாயையும் ஐந்தாண்டுக் கால உழைப்பையும் பெறவிருக்கும் தமிழ்நாட்டின் வரலாறு, எதிர்காலத்தில் எக்குறையும் கூறப்பெறுவண்ணம் உருவாகுமென்று நாம் நம்புவோம். நமது நம்பிக்கையின் உருவகமாகத் தாங்களும், உயர்திரு மொழி ஞாயிறு அவர்களும் அருள்கூர்ந்து தமிழ்நாட்டின் வரலாறு எவ்வகையில் எழுதப்படல் வேண்டுமென்பதைத் தங்கத்தமிழர்களின் கேடயமாக விளங்கும் தென்மொழி வாயிலாகத் தெரிவித்து, பண்டாரகர் மு. வ, அவர்களின் குழுவினர் எவ்வெவ் வழியில் ஆரியர் எதிர்ப்பையும், வீடணத் தமிழர்களின் எதிர்ப்பையும் எதிர்பார்க்கலாம் என்பதையும் கூறி எச்சரிக்கை விடுங்கள். தமிழக அரசின் திட்டம் எவ்வகையிலும் குறையுடையதாகி விடக்கூடாது என்பதாலே, நான் இவ் வேண்டுகோளைத் தங்களின்பாலும் மொழிஞாயிறு அவர்களின் திருமுகத்தின்பாலும் விடுக்கலுற்றேன். கல்லூர் மணியம், திருச்சி மாவட்டம்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.